விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆடி 31உ வியாழன் (15-8-68) ஜ: அவ். 20 புத்தகம் 22 இதழ் 45




## தமிழ் பிரதேசம் என ஒன்று இல்லாமல் செய்வதற்கு

# இலங்கையின் மாகாண எல்லை மாற்றப்பட வேண்டுமாம்!

## சமஷ்டிக் கோரிக்கையை நசுக்க இதுவே சரியான வழியாம்!

### சிங்கள வெறியர்களின் புதிய கூக்குரல்

**வ**டக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து, ஆயிரக் கணக்கான சிங்களக் குடும்பங்களை குடியேற்றவேண்டுமென்று பிரசாரம் செய்து வரும் சிங்கள வெறியர்கள், தமிழ் பிரதேசத்தை அழித்துவிடுவதற்கு புதியதொரு திட்டத்தையும் வெளியிட்டுள்ளனர்.


இலங்கையில் இப்போது வகுக்கப்பட்டிருக்கும் மாகாண எல்லைகள், தமிழர்களையும் சிங்களவர்களையும் பிரித்து விடுவதற்கென வெள்ளைக்காரர்களால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டதென்றும், இம்மாகாண எல்லைகளை நீக்கிவிடுவதன் மூலம் தமிழ்ப் பிரதேசம் என ஒன்று இல்லாமற் செய்துவிடலாம் என்றும் அவர்கள் பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

மாவட்ட சபை, சமஷ்டி, தனித் தமிழ் நாடு போன்ற கோரிக்கைகள் தமிழர்களிடமிருந்து பிறக்காமலிருப்பதற்கு இதுவே வழியென்றும், மாகாணங்களை நீக்கிவிட்டால் சிங்களவர்கள் தங்கள் பிரதேசத்தில் குடியேற்றப்படக் கூடாது எனத் தமிழர்கள் எதிர்ப்பதற்கும் இடமில்லாது போய் விடுமென்றும் சிங்கள தீவிரவாதிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

சிங்களத்தை நாடு முழுவதும் திணிப்பதற்கும் பின்னர் கஷ்டமிருக்காது என்றும் நாட்டின் 'ஐக்கியத்துக்கு' இதுவே வழியென்றும் கூறி வருகின்றனர்.

இன்றைய மாகாண எல்லை பிரிவினையால் தான் வடக்கும் கிழக்கும் தங்கள் பிரதேசம் என்று தமிழர்கள் கோருவதற்கு வாய்ப்பாக இருக்கிறதாம்.

(7-ம் பக்கம் பார்க்க)




'கத்தரித் தோட்டத்து வெருளி'

## உபசபாநாயகரின் "தரம்" பாரீர்!

"மாவட்ட சபை பற்றி பாராளுமன்றத்தில் பேசுவதற்காக கிடைத்த நேரம் பூராவும் திரு. அமிர்தலிங்கம் எங்கள் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைப் பற்றிப் பேசினரே தவிர வேறு மாவட்ட சபையைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை. அவரின் பேச்சைப் பார்க்கும்போது சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தது போல் தான் இருந்தது'.

—இவ்வாறு அக்கரைப்பற்றில் நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டமொன்றில் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. பேசியதாக தினகரன் (12-8-68) இதழ் கூறுகிறது.

இச் செய்தி உண்மையாக இருந்தால் உபசபாநாயகர் பதவி வகிக்கும் ஒருவரின் பேச்சு இவ்வளவு கீழிறங்கி பண்பாடற்று போக வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் கவலைப்படுவது தவிர வேறு வழியில்லை.

இந்நாட்டு இலட்சக்கணக்கான தமிழ் வாலிபர்களின் வழிகாட்டியாக விளங்கும் திரு. அமிர்தலிங்கம், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் அலங்கரிப்பவர். தமிழினத்தின் வாழ்வுக்காக அல்லும் பகலும் உழைப்பவர். அனுபவ முதிர்ச்சி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்.

அப்படிப்பட்டவரான திரு. அமிர்தலிங்கத்தை ''நாயுடன்'' திரு. சிவசிதம்பரம் உவமித்திருப்பது உண்மையானல், உப சபாநாயகரின் தரம் இவ்வளவு படியிறங்கியா போக வேண்டும் என்று நல்ல உள்ளம் கொண்டோர் வருத்தமடையவே செய்வர்.

தமிழ் மக்களின் ஓர் முக்கிய தலைவரை 'நாய்' என ஒரு புறம் அழைத்துவிட்டு மறுபுறம் ஒற்றுமை, ஐக்கியம் என்று பசப்புமொழி பேசி வரும் தமிழ் காங்கிரசாரின் வேடத்தை தமிழ்

(7-ம் பக்கம் பார்க்க)

## "பழைய குருடி கதவைத் திறவடி"

ஏரிக்கரை நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஏடுகள் மீண்டும் தமிழ்த்துவேஷத்தை கக்க ஆரம்பித்துள்ளன. 1965ல் 'தேசிய' அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் ஓரளவு 'தேசிய போர்வைக்குள்' தம்மை மறைத்துக் கொண்டு வந்த ஏரிக்கரை ஏடுகள் மீண்டும் தமது வழமையான சுயரூபத்தைக் காட்ட தொடங்கியுள்ளன.

முதன் முதலாக 'சிலோன்ஒப்சேவர்' அப்பணியை ஆரம்பித்துள்ளது. சிங்களவர்களின் பிறப்பு விகிதத்தை விட தமிழர்களின் பிறப்பு விகிதம் அதிகரித்து வருவதாகவும், இந்தியத் தமிழர்களின் பிள்ளைகள் இலங்கைத் தமிழர்கள் என பதிவு செய்யப்படுவதாகவும் ஒப்பாரி வைத்துள்ளது 'சிலோன் ஒப்சேவர்! இப்புதிய பிரசாரம் இலங்கையின் வம்சாவழித் தமிழர்களின் பிரஜாவுரிமையை எதிர்காலத்தில் சந்தேகிக்க வழி வகுக்கக் கூடியதாகும்.

ஏரிக்கரை ஏட்டின் இப்பிரசாரத்தின் நோக்கம் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டி விடுவதன்றி வேறென்ன? மிகவும் கீழ்த்தரமான முறையில் வகுப்பு வாதக்குட்டையை கலக்கி இன விரோதத்தை மூட்டி வரும் 'சன்' ஏட்டின் தகுதிக்கு 'ஒப்சேவரும்' தரம் இறங்கலாமா?

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பது தவறு!

## யாழ்ப்பாணத் தமிழர் மீதுள்ள காழ்ப்பே இவ்விதம் சிலரை எழுதச் செய்கிறது!

## ஊர்களிடையேபெயரொற்றுமை ஏற்பட்டதற்கு உண்மைக் காரணம்!

உலகியல் தோற்றத்தில்—உயிரணுக்களின் வளர்ச்சியில் பகுத்தறிவுள்ள மக்கள் தோன்றினர். உலக நடுக்கோட்டிற் கண்மையில் தான் மக்கள் தோற்றம் முதன் முதலில் இருந்திருக்க வேண்டுமென்பது நில நூல் வல்லாரின் முடிவு. இதே போல, இந்தியாவில் தென் பகுதி குமரி முனைக்குத் தெற்கே ஒரு காலத்தில் பரந்துபட்ட நிலப்பரப்பாயிருந்த தென்றும் அதன் பெயர் இலெமூரியா கண்டமென்றுங் கூறுவர். முச்சங்க வரலாறு பற்றிக் கூறும் இறையனார் அகப்பொருளும் இதனை வலியுறுத்துகின்றது.

முதலிரு சங்கங்கள் கடல் கோளால் அழிந்துபட்டன. பாண்டிய நாட்டுத் தலைநகராகவும் சங்கமிருந்த நகராகவுமிருந்த மதுரை என்பதும், கபாடபுரம் என்பதும் கடலுக் கடியில் அமிழ்ந்தன. எனவே ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவின் தென்கோடியில் உள்ள மடகாஸ்கர் வரையில் நீண்டிருந்த பண்டைத் தமிழர்களுக்கு உரித்தான பரந்துபட்ட நிலப்பகுதி கடலுக்குள் அமிழவே—மக்கள் வாழ் நிலம் நோக்கி வடக்கில் குடியேறினர். மற்றைய இனத்தினர் இந்தியாவில் (நாவலந்தீவில்) அடியெடுத்து வைக்கும் முன்னரே இந்தியாவின் வட பகுதியில் பரவி வாழ்ந்தவர்கள் தமிழர்களே!

### பெயரை மறந்திலர்

கடலுள் அமிழ்ந்த தமிழர் தாம் வாழ்ந்த பல பகுதிகளின் பெயர்களை மறவாமல் தாம் குடியேறிய பகுதிகளுக்கும் இட்டழைத்தனர். சான்றாக முதற் சங்கமிருந்த இடம் மதுரையாகும். இது கடலுக்குள் அமிழ்ந்துவிட்ட போதிலும் இரண்டாம் சங்கமிருந்த கபாட புரமும் கடலுள் அமிழவே — சற்று வடக்கே தள்ளிவந்து — பாண்டிய நாட்டுத் தலைநகராய் இன்றைய மதுரையை உண்டாக்கிக் கடைச்சங்கத்தையும் நிறுவினர். இதற்கு வட (உத்தர) மதுரை என்றொரு பெயரும் உண்டு.

தமிழ் நாட்டின் கிழ்க்கடல் துறைமுகப்பட்டினமும் சோணாட்டின் தலைநகருமான கவிரிப்பூம் பட்டினம் கடலுள் அமிழ்ந்துவிட்ட போதிலும் அதன் பெயரை நினைவூட்ட அதன் ஓரமாயுள்ள நிலப் பகுதியில் ஒரு சிற்றூரைக் காவிரிப் பூம் பட்டினம் என்று அழைத்து வருவதைக் காணுங்கால் தமிழ் மக்கள் ஊருக்கு மக்களுக்குப் பெயரிடுவதிற் கூட நினைவுச் சின்னங்களை மனத்திற் கொண்டே பெயர் வைத்தனர் என்பது பெறக் கூடும். ஒரு குடும்பத்தில் அன்புக்குரியார் மறைந்த பின்னும் அவர் பெயரைப் பிறக்குங் குழந்தைகளுக்கு இட்டழைப்பதையும் பார்க்கிறோம் அன்றோ!

### ஒரே பெயர்கள்

அது போன்றே கடல் கோள் ஏற்பட்ட காலத்தில் மக்கள் பல்வேறு திசைகளிற் சென்று குடியேறியிருக்க வேண்டும். அப்படி பழைமையான காலத்திற் குடியேறிய ஒரு பகுதியினர் சிங்களத்திலும் பிறிதொரு பகுதியினர் இன்றைய தமிழகத்திலும் குடியேறியிருத்தல் கூடும்.

அப்படியிருந்தால் தான் ஒரே வகையான பெயருடைய ஊர்கள் யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் காணக்கிடக்கக்கூடும். இவ்வூர்கள் எது காலத்தால் முற்பட்டது, எதைப் பார்த்து எதை வைத்தனர் என்ற வினாக்களுக்கு இடமில்லை.

ஏனென்றால் கடல் கோளால் அமிழ்ந்த நகரிலிருந்து விடுபட்டு யாழ்ப்பாணத்திற்குக் குடியேறியவர்கள் தாம் வைத்த ஊரே முதன்மையானது என்று வாதிடலாம் — தமிழகத்தில் மக்களும் தாம் வாழும் பகுதியில்உள்ளஊரேமுதன்மையானது என்று கூற முன்வரலாம். இவ்விருவருக்கும் இவ்விரு பகுதியினராலும் மிக விரும்பப் பெற்ற ஊர் கடல்கோளால் அழிந்துபட்டது என்பதே உண்மை.

### பொருந்தாக்கூற்று

இவ்வுண்மையை ஆய்ந்துரைக்கப் புகுந்த சில பெரியார்கள் தடுமாறி தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்சென்று குடியேறிய மக்கள் சிங்களத் தீவில் தாய் தமிழகத்தின் பெயரைத் தாம் மறவாதிருக்கும் பொருட்டு அப்பெயரிட்டனர் என்று கூறுவது பொருந்தும்செயலாகாது.

### "காசு"

### சான்று

இதற்கோர் சான்றும் காண்போம். மணிமேகலை என்னும் நூலுள்ள ஆதிரை பிச்சையிட்ட காதையில், ஆதிரையின் கணவன் சாதுவன் என்பான் வணிகர் குழுவுடன் வங்கமேறிச் சென்றான். நடுயாமத்தில் புயற் காற்றில் சிக்குண்ட கப்பல் பல் வேறு துண்டங்களாய் உடைந்து சிதறியது. சாதுவன் மட்டும் உடைந்த பலகையைப் பற்றிச் சென்றான். அலை மோதிக்கொண்டு போய் அவனை நிக்கோபார் (நக்கவாரம்) தீவில் சேர்த்தது.

இன்னுஞ் சிலர் பெரும் பலகையைப் பற்றி உயிர் மீண்டும் இக்கரை வந்தடைந்தனர். இவர்கள் சாதுவன் மனைவியிடம், ''உன் கணவன் சாதுவனும் சாவுற்றோருடன் சாவுற்றான்'' என்றனர். அதுபோல் சாதுவனும் தன்னைத் தவிர வேறு எவரும் தன்னுடன் வந்தவர்கள் உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள் என்று தான் நினைத்திருப்பான்.

ஆகவே கடல்கோள் ஏற்பட்ட காலத்தில் ஓரூரிலிருந்து வெளியேறிய மக்கள் தாம் தாம் பிழைத்தால் போதுமென பல பகுதியாய்ப் பிரிந்து சென்றடைந்த இடங்களில் தாம் முன் வாழ்ந்த ஊரின் பெயரை வைத்திருக்கலாமன்றோ?

### நினைவுச் சின்னம்

இங்ஙனம்உண்டானபெயர்கள் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் ஒரே மாதிரியான பெயருடைய ஊர்கள் காணப் பெறுகின்றன என்பதால், அவர்தம் மூதாதைகள் வாழ்ந்து—அமிழ்ந்து போன தொன்மையான ஊர்களின் நினைவுச் சின்னங்கள் இருவேறிடங்களில் இருப்பது விந்தையன்று.

குடியேறியஇருவேறுபகுதியினர் தாம் முன் பிறந்து வளர்ந்த நகரத்திற்கு மீண்டும் செல்ல வழியில்லாததால் அவ்வூர்ப் பெயர்களைத் தாம் வாழுமிடத்திற்குச் சூட்டி மகிழ்ந்தனர் எனக் கோடலே தகுதியுடையதாகும். ஆய்வுணர்வுடையார் கூறத்தகுந்த பெருமையுடையதாகும்.

### அது ஆய்வுரை அன்று

தமிழகத்தின் தொடர்புடையார் தமிழகத்திலேயே பெருங்காலம் வாழ்ந்தவர்கள் யாழ்ப்பாணம் ஆல் அங்குள்ள பெயரொப்புமை காணுங்கால்—விரைந்தமுடிவிற்கு பண்டாவிடம் இலங்கைத் தமிழர்களை வெளியேற்ற விரைந்து கையொப்பமிட்ட—ஒப்பமளித்த அமைச்சர்களைப்போல— 'தமிழகத்திலிருந்து குடியேறிய மக்கள் நெல்லையைமறக்காமல் அப்பெயரிலேயே அழைத்து வருகின்றனரே' என்று கூறுவது ஆய்வுரையாகாது.

### சேரர்கள் மலையாளியாகினர்

ஒரே நிலப் பகுதியில் வாழ்ந்த சேரர்கள், பாண்டிய சோழ நாட்டாருடன் பல பல காலம் தொடர்பின்றி மேற்குத் தொடர்ச்சி மலை பிரித்ததால், பேச்சொலி மாறி சேரர்—கேரளர் ஆகி மலைஞாலத்தார்—மலையாளத்தார் ஆகிவிடவில்லையா? பேசும் மொழியும் தமிழிலிருந்து பிரிந்து மலையாளம் ஆகமாறவில்லையா? இவ்வுண்மை மொழி நூற் புலவர்க்குப் புரியாதது விந்தையே!

மொழியாராய்ச்சி மக்களாராய்ச்சி இன ஆராய்ச்சி—இவை யெல்லாம் முன்னர் எழுதிச் சென்ற நூல்களை அப்படியே படியெடுத்துத்தம் பெயரிட்டு எழுதி விலையாக்கும் இக்காலத்தவரின் கண்ணோட்டத்தில் வடவருக்கு உடந்தையாக, யாழ்ப்பாணத் தமிழர் ஒரு காலத்தில் தமிழகத்திலிருந்து குடியேறியவர்களே என்று தமிழகப் பெரியார்கள் ஆராய்ச்சித் துறைத்தலைவர்கள் எழுதுவது மிகவும் வருந்தத் தக்கதொன்றும்.

### காழ்ப்பு

**தொன்று தொட்டு வாழ்ந்து வரும் மக்களைக் குடியேறிய மக்கள் என்றும், இன்ன நூற்றாண்டில் குடியேறியிருக்கலாம் என்றும் புனைந்துரைக்க தமிழாராய்ச்சிக்காரர்களே சிங்களவர்களுக்குத் துணை போகும் பொழுது குடியுரிமை இல்லாதாக்கத் துடிக்கும் சிங்களவர்களைக் குறை சொல்வதிற் பயனில்லை. இவற்றிற்குக் காரணம் வேறொன்றுமில்லை. யாழ்ப்பாணத்துத் தமிழர்களிற் பலர் உரை வன்மை எழுத்து வன்மை ஆய்வுத திண்மை பெற்றிருக்கின்ற உண்மை அவை இன்மை பற்றி எழும் காழ்ப்பு விளைக்கும் காய்ச்சல்-நடுநிலை இகந்து உண்மை நிலை உணர விருப்பின்றி எழுதச் செய்கிறது.**

தமிழ்ப்பற்றையும் வளர்ச்சியையும் தனித் தன்மையையும் அறிய வேண்டுமென்றால் வடக்கிலிருந்து தெற்கே செல்லச் செல்ல, தமிழ் தேய்வின்றிச் சிதைவின்றி யிருத்தலையும் பிறமொழிக் கலப்பு குறைந்திருத்தலையும் காணலாம்.

### யாழ்ப்பாணத்தில் தமிழ் முழுமை பெறுகிறது

மலையாள ஓரப் பகுதியில் வட மொழிகலந்து தனித் தமிழ் நடைபோல் பேசுவாரும், தமிழை மலையாளம் போல ஒலிப்பாருமான இரு திறத்தாரைக் காணலாம். இராமநாதபுரம் மதுரை—சிறிது இழுப்புப் பண்ணோசையிருப்பினும் தனித் தமிழைக் கண்டின்புறலாம். இவ்வளர்ச்சியும் பற்றும் யாழ்ப்பாணத்தில் முழுமை பெறுகின்றது.

வடக்கேஉள்ள தமிழர்கள் பல மொழிக்காரர்களுடன் பழக வேண்டிய நெருக்கடி தோன்றுவதால் மொழி நலம் கெடுகிறது. பண்டு

(9-ம் பக்கம் பார்க்க)




பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
**கமலா பீடி**
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தந்தி: தாமரை
தொலைபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: சுந்தரலிங்கத்தைப் பற்றித் தங்கள் கருத்து யாது?

ப: மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களைப் பற்றி கருத்து தெரிவித்து, எனது காலத்தை வீணுக்க நான் விரும்பவில்லை.

கே: ஊர்காவற்றுறை பா. உவுக்கு ஜி. ஜி. மாலை போட்டாராமே ஏன்?

ப: எதிரிக்கு எதிரி நண்பன் அல்லவா? அதனுல் இருக்கும்!

ப. கணபதி,
பதுளை.

கே: முன்பின் தெரியாத நபர்களுடன் கதைக்கும் பெண்ணை யாருடன் ஒப்பிடலாம்?

ப: தேர்தலில் போட்டியிடும் அரசியல்வாதியுடன்!

ஃ

'பல்லவன்',
தொண்டமானுறு.

கே: மா. சபை கிடைக்குமென்ற நம்பிக்கையில் தமிழர்களின் உரிமைகள் பலவற்றை தமிழரசுக் கட்சி இழந்து விட்டதாக அடிக்கடி கூறித்திரியும் திரு. மு. சிவசிதம்பரமவர்கள் அதே உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு தமிழ் காங்கிரஸ் எடுத்த நடவடிக்கைகளை ஒரு போதும் கூறுவதில்லையே ஏன்?

ப: பானையிலிருந்தாலல்லவா அகப்பையில் வரும்? நடவடிக்கை ஏதாவது எடுத்திருந்தாலல்லவா அதை விபரிக்க முடியும்?

ஃ

மு. கருணுநிதி,
ஏழாலை மேற்கு.

கே: ஆண்களா பெண்களா காதலிக்கத்தொடங்குகிருர்கள்?

ப: பெண்களே தொடங்குகிருர்கள்; ஆண்கள் முடித்து வைக்கிருர்கள்.

கே: காதலுக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மட்டும் ஏற்படுவது காதல்; யாரிடத்தும் ஏற்படக் கூடியது அன்பு!

கே: டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாணம் வந்தால்...?

ப: இட்லி சாம்பாருடன் விருந்து வைக்கலாம் என்று பார்க்கிறீர்களோ?

ஃ

இ. கோபாலக் கிருஷ்ணன்,
உடுப்பிட்டி.

கே: நான் எனது ஊரில் மகா வீரனுக வருவதற்கு எனது ஆசை அத்தான் தடையாயிருக்கிருரே. இதற்கென்ன செய்யலாம்?

ப: உமது சகோதரியை அவருக்குக் கட்டி வையுங்கள்! அடங்கி விடுவார்!!

ஃ

க. ஸ்ரீதரன்,
வயாவிளான்.

கே: எனது நண்பன் ஒருவன் தமிழரசுக்கட்சி எல்லா தமிழ் மக்களையும் காட்டிக் கொடுக்கிறது என்கிருர். ஆனுல் நான் பொ. கட்சி தான் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தது என்றேன். எனது நண்பன் அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன?

ப: உங்கள் நண்பனுக்கு மனக் கோளாருக இருக்கலாம். உடனே அங்கொடைக்கு அனுப்பி விடுங்கள்!

ஃ

கே. இராசதுரை,
உடுவில்.

கே: "கோவியர்" சமூகத்தைப் புண்படுத்தும் கருத்தை அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வெளியிட்டதேன்?

ப: குறித்த சமூகத்தைப் புண்படுத்தும் எக்கருத்தையும் அமிர்தலிங்கம் கூறிவிடவில்லை. ஆர். ஜி.யின் தவருன கூற்றுக்கு விளக்கமளித்தார் அமிர்தலிங்கம். ஆனுல் குறித்த சமூகம் தான் அரிசன மக்களை அடக்கி ஒடுக்குவதாகச் சங்கானையில் கலவரத்தை அடுத்து நடந்த சமாதான மாநாட்டில் அதே சமூகத்தைச் சேர்ந்தவரும் சமசமாஜக் கட்சியின் முன்னுள் செனட்டருமான ஓர் பிரமுகர் திட்டவட்டமாக கூறியிருந்தார். அதை மறந்துவிட்டீர்களா?

ஃ

கே: இராமநாதன்,
கொழும்பு 12.

கே: புதிய பட்ஜட் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: ஏழை, நடுத்தர மக்களுக்கு எவ்வித ஆறுதலுமளிக்கவில்லையென்று கருதுகிறேன்!

கே: எனது மகன் பொய், புரட்டு, பித்தலாட்டம், போன்றவற்றில் கைதேர்ந்தவனுக இருக்கின்றுன். அவனுக்கு ஒரு பெயர் சூட்டுங்கள் பார்க்கலாம்?

ப: "பொன்னம்பலம்"!

கே: நான் ஓர் பத்திரிகைக்காரன். முன்னர் தமிழரசுக் கட்சியை போற்றிப் புகழ்ந்து துதிபாடினேன். இப்போது திட்டப்போகின்றேன்?

ப; ஏன் நீரும் செனட்டர் பதவியை எதிர் பார்த்து ஏமாந்து விட்டீரோ?

ஃ

த. சிவனேசராசா,
பருத்தித்துறை.

கே: மனிதன் உலகில் வாழ்வதெப்படி

ப: மூச்சுவிட மறக்காததால்!

ஃ

சி. தில்லைநாதன்,
துறையாமூலை.

கே: ஆசை, களவு, கோபம் கொண்டவனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: தமிழ்காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் போல இருக்கும்!

ஃ

பா. இருதய மனேகரன்,
சக்கோட்டை.

கே: மாவட்டசபைமசோதாவைப் பிரதமர் கைவிட்டாரென பொன்னம்பலம் கட்சியினர் அறிந்ததும் எப்படி இருந்திருப்பர்?

ப: பேசுவதற்கு இனி எந்த 'சப்ஜக்ட்டும்' இல்லையே என்று கவலையடைந்திருப்பார்கள்!

கே: பொன்னரைப்போலவே உடுப்பிட்டி யாரும் பொய் புனையத் தொடங்கி விட்டாரே, இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: காக்கையோடு கூடிய புருவும் மலம் தின்னும் என்பது தெரியாதா?

ஃ

இ. தங்கராசா,
வறக்காமுறை.

கே: நான் சுமார் மூன்றுண்டு காலமாக ஒரு கன்னியை நேசித்து வந்தேன். ஆனுல் அவளோ இன்னெருவரை நேசிக்கின்ருள். நான் இதற்கு என்ன செய்வது?

ப: அவர்கள் இருவருக்கும் மணமுடித்து வைத்து வாழ்த்து தெரிவியுங்கள்!

கே: தமிழரசுச் செல்வங்களால் சாதிக்க முடியாத சாதனைகளை பொன்னம்பலத்தால் சாதிக்க முடியுமா?

ப: ஆமா சாதிக்க முடியும். தமிழினத்தை சிங்களவர்களுக்கு விலை கூறி விற்கவும் பதவி என்ற எலும்புத் துண்டுக்காக காலில் விழவும் தமிழரசால் முடியாது தானே! அந்த 'சாதனைகளை' சாதிக்க பொன்னம்பலத்தால் தானே முடியும்?


# நுரையும் குமிழும் நீங்கி விடும்



ஆனுல் நீண்ட நேரம் நிலைத்து நின்று
ஈறுகளையும் பற்களையும் பாதுகாப்பது
போர்ஹான்ஸ் பற்பசையின் விசேட மருந்துகளே.

நுரைக்கும் குமிழுக்கும் மேலாக உங்களுக்கு தேவைப்படுவது உறுதிமிக்க ஆரோக்கிய ஈறுகளும் உரமான வெண்ணிறப பற்களுமே. ஈறுகளை ஆரோக்கியமாகவும் பற்களை வெண்ணிறமாகவும் விளங்கச் செய்ய உதவுவது போர்ஹான்ஸ் தரும் தனிப்பட்ட பராமரிப்பே.

உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் போர்ஹான்ஸ் பற்பசை. போர்ஹான்ஸ் புகழ் மிக்க பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறையில் தயாரானது.




மஹாராஜா நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ‘தனித் தமிழ் நாடு’

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரிடையே — குறிப்பாக தமிழ் வாலிபர்களிடையே எதிர்காலத்தில் ஈழத்தமிழினம் சுயமரியாதையுடன் இந்நாட்டில் வாழ்வதற்கு ஒரேயொரு வழி, தனியே பிரிந்து சென்று ‘சுதந்திரத்தமிழ் நாடு’ ஒன்றை அமைத்துக் கொள்வதே என்ற எண்ணம் மெல்ல மெல்ல துளிர்விட்டு வருகிறது. தமிழரசு வாலிப முன்னணியினரும் இதே திசையில் தங்கள் புலனைச் செலுத்தியுள்ளனர்.

தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை பற்றி தமிழ் வாலிபர்கள் தாமாக சிந்திக்கிறார்கள் என்பதை விட சிங்கள இன வெறியர்களால் அப்படிச் சிந்திக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று கூறுவதே காலப் பொருந்தும்.

தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கை அரசியல் ரீதியில் முதிர்ச்சியடையாதது என்றும் அதனால் தமிழ் மக்களுக்கு தீமையே விளையுமென்றும் சிலர் வாதிடலாம். ஆனால் இக்கோரிக்கையின் பலாபலன்களை ஆராய்வதை விட இத்தகைய சிந்தனை எப்படி எழுந்தது என்பதை இந்நாட்டுத் தலைவர்கள்—குறிப்பாக சிங்களத் தலைவர்கள் சிந்தித்துப் பார்ப்பதே பொருத்தமானது என்று கருதுகிறோம்.

நம்மைப் பொறுத்தவரை தனித்தமிழ் நாட்டுக் கொள்கையை நெடுங்காலமாகவே எதிர்த்து வந்திருக்கிறோம். இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் ஊறுதேடாமலும், அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்கள்மொழி, பிரதேச சுயாட்சி உரிமைகளைப் பெற்று சிங்கள மக்களுடன் சம வாய்ப்பு பெறக்கூடியதுமான ஓர் சமஷ்டி அரசியற் திட்டத்துக்காகவே கடந்த 20 ஆண்டுகளாக போராடி வருகிறோம்.

**இன்றைய அரசியல் நிலையிலும் கூட நாம் அந்த நம்பிக்கையை இழந்து விடவில்லை. இலங்கையின் ஒருமைப்பாடு கெட்டு விடாமல் — அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்களின் சுயாட்சி உரிமையையும் பெற்று ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பிவிடலாம் என்ற அசையாத நம்பிக்கையுடனேயே இன்றும் இருக்கிறோம்.**

ஆனால் இதே நம்பிக்கை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதை தீர்மானிக்கும் சக்தி நிச்சயமாக நமது கையில் இல்லை. அது சிங்கள மக்களும் அவர்தம் தலைவர்களும் இந்நாட்டு சிறுபான்மைப் பிரச்சினையில் எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்ததாக இருக்கப்போகிறது.

இதற்கு முன் என்றுமே இல்லாத அளவில் இன்று சிங்கள மக்களிடையே தமிழின ஒழிப்புப் பிரசாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. போதிய அதிகாரங்களற்றது என்று கூறப்பட்ட மாவட்ட சபை மசோதாவைக் கூட தேசிய அரசாங்கத்தால் கொண்டுவர முடியாமற் தடுத்துவிட்டனர் சிங்கள இனவெறியர்கள்.

மாவட்ட சபை மசோதாவைக் கைவிடுவதாகப் பிரதமர் அறிவித்து விட்டபோதும்கூட சிங்கள வெறியர்கள் அடங்கி விடவில்லை. தமிழினத்தை அழித்தொழித்து இந்நாட்டில் தனிச்சிங்கள ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று பேயாட்டம் ஆடி வருகிறார்கள்.

சிங்களக்கட்சிகளின் அடிமனதில் இருந்தாலும் கூட இதுவரை அவை பகிரங்கமாக கூறத்தயங்கி வந்த தமிழ் இன ஒழிப்புக்கருத்துக்களையெல்லாம் ஹேமாபசநாயகா, ஆர்.ஜி. போன்றோர் இப்போது பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

1949ம் ஆண்டு இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டதன்மூலம் 10இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த தொகுதிகள் சிங்களத் தொகுதிகளாயின.

**அதேபோல தமிழ் மக்கள்பெரும்பான்மையினராக வாழும் வடக்கு கிழக்கிலும் சிங்களவர்களை அரசாங்க ஆதரவுடன் குடியேற்றத் திட்டங்கள் என்ற போர்வையில் பெருமளவில் கொண்டு சென்று குடியேற்றுவதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் சக்தியை அழித்து விட வேண்டும் என்ற பயங்கரமான திட்டத்தை பகிரங்கமாகவே வெளியிட்டு வருகின்றனர் சிங்கள தீவிரவாதிகள்.**

தமிழினம் தன் தனித்துவத்தை இழந்து சிங்கள தேசியத்துள் கலந்து விடவேண்டும் என்றும் கூறிவருகிறார்கள்.

தமிழினத்தையே அழித்து ஒழித்து விடத் துடிக்கும் சிங்கள வெறியர்களின் இப் பேச்சுக்களும் நடவடிக்கைகளும்தான் தமிழ் **வாலிபர்களுக்கு ஈழத்தின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கையைக் குலைத்து தனித்தமிழ் நாடு பற்றிச் சிந்திக்க வைத்திருக்கிறது.**

எனவே பிரிவினை எண்ணத்திலிருந்து தமிழ் வாலிபர்களை விடுவிக்க வேண்டும் என்று தேசிய நலனிலும் ஈழத்தின் ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கையுள்ள சிங்களத் தலைவர்கள் அந்தரங்க சுத்தியுடன் விரும்புவார்களாயின் சிங்கள வெறியர்கள் ஏற்படுத்தியுள்ள அச்சத்தை அகற்ற முன்வர வேண்டும். தமிழ் பேசும்மக்களின் பிரச்சினைகளில் நியாயத்துடனும் பெருந்தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

**முக்கியமாக, வடக்கும், கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பரம்பரைத் தாயகம் என்பதையும், இவ்விரு மாகாணங்களிலும் தமிழ் பேசும்மக்களின் பிரதிநிதித்துவ உரிமைக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அரசாங்க ஆதரவுடன் திட்டமிடப்பட்ட பெரிய அளவிலான சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட மாட்டாதென்ற கொள்கையையும் எல்லா சிங்களக்கட்சிகளும் அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரிப்பதுடன் மட்டுமன்றி, அக்கொள்கையை விசுவாசத்துடன் கடைப்பிடிப்பதும் அவசியமானது.**

தமிழினத்தை இந்நாட்டிலிருந்து அழித்தொழிக்கும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லையென்பதையும் உறுதி செய்வதுடன் தமிழினத்தை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரித்து அடிப்படை உரிமைகளையும் தாராள மனதுடன் வழங்கவேண்டும்.

இவற்றைச் செய்யாமல், சிங்கள இனவெறியர்களின் தமிழொழிப்பு நடவடிக்கைகளை தொடர விட்டால், ‘தனித்தமிழ் நாடு’ எண்ணம் வளர்ந்து வருவதை நிறுத்தி விடுவது சுலபமான செயலல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**சில இலட்சம் நாகர்கள் வட இந்திய மலைப்பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டு தனி நாடு கோரி நடாத்தும் போராட்டத்தை நசுக்க இந்திய அரசாங்கமே முயன்று தோல்வியடையும் போது, 25 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் தங்கள் இனத்தையும் மொழியையும் காப்பாற்ற அப்படியொரு போராட்டத்தை ஏன் நடத்தக்கூடாது என்ற எண்ணம் தமிழ் வாலிபரிடையே எழுவதில் அதில் ஆச்சரியப் பட ஏதுமில்லை.**

# பிலிப் குணவர்த்தனவின் பேச்சு உணர்த்தும் உண்மை

**1956-ம்** ஆண்டு ஆனி ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட அன்று முதல் 1965வரை சிங்களத் திணிப்புக்கு எதிராகவும், தமிழ் மொழியுரிமை கோரியும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் இந் நாட்டுத் தமிழ் மக்கள் பல போராட்டங்களை நடத்தினர்.

1956-ம் ஆண்டு ஆனி ஐந்திலே உலகம் வியக்கத்தக்க முறையில் கொழும்பு மாநகரின் கால்பேஸ் திடலில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தி அதன் பயனாக சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டு பசும் புல்லில் தமது பச்சை ரத்தத்தைக் கொட்டினர் தமிழரசுத் தொண்டர்கள்.

இதைத் தொடர்ந்து 10 ஆண்டுகளாக பல கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள், திருமலை யாத்திரை, சிங்கள சிறி எதிர்ப்பு போராட்டம் 1961-ல் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம், போன்ற பல்வேறு கிளர்ச்சிகளையும், உரிமைப்போராட்டங்களையும் நடத்தினர் தமிழ் மக்கள். இப் போராட்டங்களின் பயனாக நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர்; ஆயிரக்கணக்கானோர் சொத்திழந்தனர்.

தமிழரசுத் தலைவர்களும் தொண்டர்களும் பலமுறை காராக் கிருகத்தில் அடைக்கப்பட்டனர்.

இப் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் இரு நோக்கங்களை முன் வைத்து நடத்தப் பட்டன.

(1) சிங்களத்தை தமிழ் மக்களின் தொண்டைக்குள் பலவந்தமாக திணிக்கும் அப்போதைய ஆட்சியின் நடவடிக்கைகளை எதிர்த்தல்.

(2) தமிழ் மொழிக்கு உரிமை பெறல் இவையிரண்டுமே அடிப்படைக் காரணங்களாக திகழ்ந்தன.

தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் இப் போராட்டங்களை நடத்திய போது பலர் கேலியும் கிண்

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

டலும் பேசினர்: சத்தியாக்கிரகத்தால் உரிமைகளை பெற்றுவிட முடியுமா? சிங்களத்திணிப்பை தடுத்துவிட முடியுமா? தமிழுரிமையைப் பெற்றுவிட முடியுமா? சிங்களத் தலைவர்கள் மனமாற்றமடைந்துவிடுவார்களா என்றெல்லாம் பலர் தூர நின்று வேடிக்கைபார்த்தபடி அபிப்பிராயங்கள் வெளியிடத் தவறவில்லை.

இத் தூற்றல்களையும் இழிமொழிகளையும் கேட்டு கட்சியும் தலைவர்களும் தொண்டர்களும் இம்மியும் தங்கள் பாதையை மாற்றவுமில்லை; கிளர்சிகளைக் கைவிடவுமில்லை.

**தமிழினம், தமிழரசுக்கட்சியின் தலைமையில் 10ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நடத்திய சாத்வீக போராட்டங்கள் சிங்களத் தலைவர்களிடையே (எல்லோரும் இல்லாவிடினும்) எவ்வளவு தூரம் மனமாற்றம் ஏற்படவும், எதைச் செய்தும் தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணித்துவிட முடியாதென்ற உண்மையை உணரும்படி செய்யவும் வழி செய்திருக்கின்றன என்ற உண்மை இப்போது தெரியவந்திருக்கின்றது.**

இவ்வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனவின் பேச்சிலிருந்து இவ்வுண்மை தெளிவாகியது.

**“சிங்கள மொழியை தமிழர்கள் மீது திணிக்க முடியாது. இந்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்பதை நாம் மறக்கக் கூடாது. நாம் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும். தமிழ் மொழிக்கும் நியாயமான இடமளிக்கப்பட வேண்டும்”**

இவ்வாறு பிலிப் குணவர்த்தன குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. பிலிப் குணவர்த்தன 1956-ம் ஆண்டு இருந்த நிலையைப் புரிந்து கொண்டால் தான் அவர் இன்று அடைந்திருக்கும் மனமாற்றமும், தமிழ் மக்களின் உறுதியான நிலை ஏற்படுத்திக் கொடுத்த வெற்றியின் மகிமையும் விளங்கும்.

1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டு வந்த திரு. பண்டாரநாயகாவின் எம். இ. பி. அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகித்தவர் திரு. பிலிப் குணவர்த்தன. அன்று தீவிர சிங்கள வெறியராக விளங்கியவர்.

### அன்றைய பிலிப்

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து அமரர் வன்னியசிங்கம் 1956-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில்,

**“தமிழர்கள் சிங்களத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தால்துப்பாக்கிமுனையில் அதைத் திணிப்போம்.”**

என்று சிங்கம்போல உறுமியவர் திரு. பிலிப். அப்படிப்பட்டவரிடமிருந்து இத்தகையதோர் கருத்து வெளிவந்திருக்கிறதென்றால் அது தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் அணி திரண்டு, சிங்களத் திணிப்பை எதிர்த்து காட்டி வந்த உறுதிக்கும் நடத்திய

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ஜீ. ஜீ.க்கு

கொஞ்சக் காலமாக, ஐ.நா. சபையில் ஒலித்த தங்கள் குரல் தமிழ் பகுதிகளில் ஒலிக்கவில்லையே, எது காரணமாக இருக்குமோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். மாவட்ட சபை மசோதாவை எதிர்த்துப் போட்ட வரட்டுக் கூச்சலில் தங்களுக்குத் தொண்டை கட்டிப் போயிருக்குமோ என்று கூடப் பயந்தேன். ஆனால் பிற்பாடு தான் அதன் காரணத்தை என்னால் ஊகித்துக்கொள்ள முடிந்தது.

ஆமாம், நீங்கள் பத்மினி குலரத்ன கொலை வழக்கில் உங்கள் புலன்களைச் செலுத்திக் கொண்டிருந்ததையும் அதனால் தான் தமிழ்ப் பகுதியில் 'கோயபல்ஸ்' பிரசாரத்தில் ''இன்டறெஸ்ற்'' காட்டவில்லை என்பதையும் புரிந்து கொண்டேன்.

என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா, எனக்குஇருக்கும் பாழாய்ப் போன மறதியால் வந்த வினை அது.

உங்கள் உழைப்புக்குப் பாதகம் ஏற்படாமல் ஓய்வு நேரத்தில் அரசியல் சர்க்கஸ் விளையாட்டில் ஈடுபடுவது தானே உங்களது 'ஹாபிட்' அரசியலை ஓய்வு நேரமாகக் கொண்டு பொழுது போக்குபவர் தானே நீங்கள்!

இந்த உண்மையை மறந்து போனது எனது தவறுதான். மன்னித்து விடுங்கள்.

### அரசியல் கோமாளி

ஆனாலும் பொன்னம்பல ஐயனே, தமிழ் மக்களின் அரசியலில் நீங்களும் உங்கள் கட்சியும் தேவையற்ற குப்பை கூழங்களாக— தடைக் கற்களாக விளங்கி வருவதாகப் பலர் சொன்னாலும், என்னைப் பொறுத்த வரை நீங்கள் வாய் திறவாவிட்டால் அரசியலில் சுவை கெட்டு விடுகிறது; தமிழ் மக்களுக்கும் நல்ல நகைச் சுவை கிடைக்க மாட்டேன் என்கிறது.

ஓர் நல்ல நாடகத்தில் கதாநாயகன் எவ்வளவு திறம்பட நடித்தாலும் வில்லனும் கோமாளியும் இல்லாவிட்டால் அது சுவைப்பதில்லை. அதேபோல தமிழ் பகுதி அரசியலில் தமிழரசுக் கட்சி கதாநாயகனாக விளங்கிய போதும், நீங்கள் தான் வில்லனாகவும், அதே சமயம் கோமாளியாகவும் விளங்கி வருகிறீர்கள்.

உங்கள் அரசியற் கோமாளித்தனத்தைக் கண்டு தமிழ் மக்கள் விலா நோகச் சிரிக்கிறார்கள். தமிழ் மக்களின் சிரிப்புக்காளான அரசியல்வாதியாகத் தாங்கள் இருக்கிறீர்களே அந்த வகையில் நீங்கள் பாக்கியசாலி தான்!

### டுப் மாஸ்டர்

நீங்கள் அடித்த கோமாளிக கூத்துக்கள் தான் எத்தனை? அவை எல்லாம் தமிழ் மக்கள் மனதில் இன்னும் பசுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

நீங்கள் சொல்வது எதையும் இப்போது தமிழ் மக்கள் நம்புவதில்லை; நல்ல நகைச் சுவையாக மட்டுமே கேட்டுச் சிரித்து விட்டு மறந்து விடுகிறார்கள்.

தாங்கள் ஐ. நா. சபைக்கு சென்ற போது, யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசியதாகச் செய்தி வந்ததே—அச்செய்தி எது?—ஆ அதுதான் ஐ. நா.வில் தமிழ் மக்களின பிரச்சினைகளை எடுத்துக் கூறுவேன் என்ற உங்கள் வாக்குறுதி! அதைக் கேட்டுத் தமிழ் மக்கள் சிரித்துக் கொண்டார்கள், நீங்கள் ஒரு சிறந்த டுப் மாஸ்டராக இருக்கிறீர்களே என்று.

### 65 பவுண் மாலை

நீங்கள் ஐ. நா. விலிருந்து இலங்கைக்கு வந்ததும், 65 தங்கப் பவுண் மாலை சூட்டப்பட்டபோது அம்மாலையைக் கொண்டு 3 மாதத்துக்குள் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப் போவதாகக் கூறினீர்கள்? இது வரை அது என்ன ஆச்சு என்று தமிழ் மக்கள் ஏன் கேட்கவில்லை என்று யோசித்தீர்களா? நீங்கள் வெறும் டுப் மாஸ்டர் என்பது அவர்களுக்குத் தெரியும்!

உங்களுக்குத் தமிழில் அவ்வளவு பாண்டித்தியம் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். என்னவோ அதை நான் அறியேன். ஆனால் பின் வரும் தமிழ்ப் பாடல் மட்டும தங்களுக்குத் தலைகரணமாகத் தெரிந்திருக்கவேண்டுமென நினைக்கிறேன்.

''பொய்யுடை ஒருவன்
சொல் வன்மையினால்
மெய் போலும்மே
மெய் போலும்மே!''

உங்களிடம் சொல் வன்மை ஓரளவு இருக்கிறது. அதைக் கொண்டு பொய்யையும் மெய்யாக்கிக் காட்டப் பல சந்தர்ப்பங்களில் முயலுகிறீர்கள்.

உங்கள் தொழிலில் அது சித்தித்தாலும், அரசியலில் அது சித்திக்காது. ஏனெனில் இன்றைய தமிழ் மக்கள் அரசியலில் கூர்ந்த மதி படைத்தவர்கள்.

### புதிய பிரசாரம்

நீங்களும் உங்கள் அடியாட்களான மற்ற இரு சீடர்களும் தமிழ்ப் பகுதிகளில் ஒரு புதுவித பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறீர்கள். அதைக் கேட்டுத் தமிழ் மக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியார் மாவட்ட சபையை நம்பி,

(1) ஐந்தே கால் இலட்சம் மலைநாட்டுத் தமிழரை நாடுகடத்தும் சட்டத்தை ஆதரித்து விட்டார்கள்.

(2) திருமலைத் துறைமுகத்தைப் பறி கொடுத்து விட்டனர்.

(3) அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தனர்.

இறுதியில் மாவட்டசபை மசோதாவையும் இழந்தனர் என்று கூறி வருகிறீர்கள்.

ஐயா, [illegible] சொன்னால் [illegible] பொருந்த [illegible] சொல்ல வேண்டும். [illegible]

பிடி சோற்றுக்குள் ஒரு பூசணிக்காயை மறைக்க முடியாது. ஆனால் நீங்கள் மறைக்கப் பார்க்கிறீர்கள்.

நீங்களும் உங்கள் தமிழ் காங்கிரசும் எதிர்க் கட்சியில் இருப்பது போலவும் மேற் கூறியசட்டங்களையெல்லாம் நீங்கள் எதிர்த்தது போலவும், தமிழரசுக்கட்சி தான் அரசாங்கத்துடன் சேர்ந்து இச்சட்டங்களை ஆதரித்தது போலவும் யாருக்குக் கயிறு விடப் பார்க்கிறீர்கள்?

### பத்தினி வேடம் ஏன்?

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தைத் தமிழரசுக்கட்சி ஆதரித்தது—அதில் கட்டாய நாடு கடத்தலுக்கு இடமில்லை என்பதால்— அதே சட்டத்தை இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமானும் ஆதரித்தார்.

இதே சட்டத்தை நீங்களும் உங்கள் இரு சிவசிதம்பரங்களும் பாராளுமன்றத்தில் ஆதரித்துப் பேசி, வாக்கும் அளித்துவிட்டு வட இலங்கையில் நின்று பத்தினி வேடம் போடுவதேன்? யார் கண்ணில் மண் தூவப் பார்க்கிறீர்கள்? தமிழரசுக்கட்சி அதை ஆதரித்தது துரோகம் என்றால் அத்துரோகத்தை நீங்களும் சேர்ந்து செய்ததேன்?

இதேபோல திருமலைத் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சி அதை எதிர்த்துக் கடைசி மட்டும் போராடியது. ஆனால் தேசிய மயத்தை எதிர்த்து நடவடிக்கை எதுவும் எடுக்காது—தேசிய மயத்தை ஆதரிப்பதாகப்

### 'எஸ்ஸாரெம்'

பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்ட தாங்கள் இன்று திருமலைத் துறைமுகத்துக்காக நீலிக் கண்ணீர் வடிப்பது யாரை ஏமாற்ற?

### ஐ. நா. சென்றும் குதர்க்க வாதமா?

அடையாள அட்டை மசோதாவிலும் இதே கதை தானே. நீங்களும் உங்கள் கட்சியின் இரு சிவசிதம்பரங்களும் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்துப் பாராளுமன்றத்தில் வாக்கு கொடுத்து விட்டு வடக்கே நின்று வம்புக் கதை பேசுவதேன்? இதுதான் உங்கள் அரசியல் பண்பாடா? இது தான் உங்கள் அரசியல் நாகரீகமா?

அரசியற் பண்புக்கு இலக்கணமாக திகழும் ஐ. நா. சபை மண்டபத்தில் உங்கள் கால் பட்டபின்னர் கூட குதர்க்க வாதம் பேசுவதை நீங்கள் கைவிட்டபாடில்லையே!

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கேட்டீர்களாம் —தமிழ் மக்களின் துரோகியார் நானா, தமிழரசுக்கட்சியாரா என்று! ஏன் ஐயா வீணாக கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிந்து பார்க்கிறீர்கள்?

### உங்கள் துரோகம்

அன்றிலிருந்து இன்று வரை நீங்கள் தமிழினத்துக்கு செய்து வந்தது ஒவ்வொன்றும் துரோகம் தானே! அவற்றை மறைக்கப்பார்க்கிறீர்கள்! ஆனால் அது உங்களால் முடியாது!

50க்கு 50 தான் என் இறுதி இலட்சியம் என்று முழங்கினீர்கள்! பின்னர் அதைக் கோட்டைவிட்டீர்கள்!

[illegible] ஒற்றையாட்சியை [illegible] ஏற்க [illegible] சங்கநாதம்

## போடாத தபால்

செய்தீர்கள். பின்னர் வாலை சுருட்டி வைத்துக் கொண்டு அன்றும் இன்றும் ஒற்றையாட்சிதான்என் கொள்கையென்று கூறிவருகிறீர்கள்.

நீங்கள்செய்தமிகப்பெரிய துரோகம்— தமிழினத்தின் வரலாற்றிலேயே மறக்க முடியாத துரோகம்10இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களை ஒரு மந்திரிப் பதவிக்காக சிங்களத் தலைவர்களின் சதித்திட்டத்துக்கு தாரை வார்த்துக் கொடுத்ததாகும்— ஆம் 1949-ம் ஆண்டின் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை ஆதரித்ததாகும்.

நீங்கள் அன்று அச்சட்டத்தை ஆதரித்ததன் மூலம், 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமைக்குக் குழி தோண்டியது மட்டுமன்றி மலைநாட்டுத் தமிழர்களுக்கும் ஏனைய பகுதித் தமிழர்களுக்குமிடையே இருந்து வந்த உறவைக் கெடுக்கக் காரணமாக இருந்தீர்கள்.

### தொண்டமான் கூற்று

இதை அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய திரு. தொண்டமானே தெளிவாகக் குத்திக் காட்டினார். ''அன்று சில யாழ்ப்பாணத்தவர்கள் (உங்களைக் குறிப்பிட்டுத் தான்) சிங்களவர்களுடன் சேர்ந்து 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களைக் காட்டிக் கொடுக்காமலிருந்திருந்தால் இன்று இலங்கைத் தமிழர்களுக்கு ஆபத்தான அரசியல் நிலை ஏற்பட்டிருக்காது''— என்று கூறினார் திரு. தொண்டமான்.

எனவே இதைவிட மிகப் பெரிய துரோகம் வேறு ஏதாவது உண்டா? அன்று நீங்கள் செய்த பெருந் துரோகத்தின் பலாபலனையே இன்று இந்நாட்டுத் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் அதை மானசீகமாக வென்றாலும் உணர்ந்தால், அரசியலில் யோக்கியமுள்ளவராக இருந்தால் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டும். கதறியழ வேண்டும். என்னால் தமிழினத்துக்கு இந்நிலை ஏற்பட்டுவிட்டதே என்று வெதும்ப வேண்டும்.

### சீட்டு கிழியும்

ஆனால் அதை விடுத்து நான் என்ன துரோகம் செய்தேன் என்று கேட்பதைக் கண்டு தமிழினம் கொதித்தெழப் போகிறது! அடுத்த தேர்தலில் அரசியலிலிருந்து உங்களுக்கு சீட்டுக் கிழிபடப் போகிறது இதை நினைக்கும்போது உங்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீராவது விடாமலிருக்க என்னால் முடியவில்லை.

இது மட்டுமா?

நீங்கள் மந்திரிப் பதவி வகித்தபோது தான் அல்லை, கந்தளாய், கல்லோயா போன்ற பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் துரிதமாக நடத்தப்பட்டது. இதை எதிர்த்து நீங்கள் ஒரு சுண்டு விரலாவது தூக்கியது உண்டா? உங்கள் ஆதரவுடன் தானே தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றம்நடைபெற்றது? இதைத் துரோகம் என்று கூறாமல் வேறு என்னவென்பது!

1954ம் ஆண்டு கொத்தலாவலை மந்திரி சபையிலிருந்து உதைத்து தள்ளப்படும் மட்டும் மந்திரி பதவியில் ஒட்டிக் கொண்டிருந்து, தமிழ் மக்களுக்கு அவமானத்தை வாங்கித் தந்தீர்களே அது துரோகமில்லையா?

1956-ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக இந்நாட்டுத் தமிழ் மக்கள் பொங்கியெழுந்து கிளர்ச்சி செய்த போது நீங்கள் மட்டும், சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். இது துரோகமின்றி வேறென்ன?

1957ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சிங்கள ஆட்சிக்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றுபட்டு கடைகளைப் பூட்டி வைத்து கறுப்புக் கொடிகட்டி துக்கம் அனுஷ்டித்த போது கடையைத் திறக்கும்படி கோரி ஒற்றுமைக்கு உலைவைத்தீர்களே அதற்கு பெயர் துரோகமன்றி வேறென்ன?

அதிகம் ஏன்? அண்மைக் காலச் சம்பவம் ஒன்றே தங்கள் துரோகத்துக்கு உதாரணமாக கூற போதுமே! மாவட்ட சபைகள் மசோதாவை இந்நாட்டுத் தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

# ஆசையில் ஓர் அரசியற் கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழரசு எம். பீக்களில் இலஞ்சக் குற்றமா? முழுப்பொய்! முடிந்தால் அதைநிரூபியுங்கள்!"

## வதந்தி பரப்புவோருக்கு! அமிர்தலிங்கம் சவால்!

**"தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரில் இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதாக சிலர் செய்து வரும் பிரசாரம் அப்பட்டமான பொய்ப் பிரசாரமாகும். இப்படிப் பொய்ப் பிரசாரம நடத்திவருபவர்களை முடியுமானுல் அதை நிரூபியுங்கள் என்று நான் சவால் விடுகிறேன்'**

இவ்வாறு இம்மாதம் 7-ம் திகதி கிளிநொச்சி மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான தமிழரசுப் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பொது மக்களின் ஆரவாரக் கையொலியிடையே முழக்கமிட்டார்.

இக் கூட்டம், தமிழரசு ஆதரவாளர்களான கிளிநொச்சிப் பட்டினசபையின் புதிய தலைவர் திரு. க. ச. சுந்தையா, உபதலைவர் திரு. இ. நடராசா ஆகியோரை பாராட்டுவதற்கும், பூநகரி, துணுக்காய், பல்லவராயன் கட்டு கிராம சபைகளின் தலைவர்களை வரவேற்பதற்கும், தமிழ் காங்கிரசினரின் பொய்ப் பிரசாரங்களுக்கு பதிலடி கொடுப்பதற்குமாக நடைபெற்றது.

அண்மைக் காலத்தில் கிளிநொச்சித் தொகுதியே காணுத அளவுக்கு இக் கூட்டத்தில் அலையலையாக மக்கள் வெள்ளம் திரண்டது. கூட்டத்தையொட்டி கிளிநொச்சி பட்டினம் முழுவதும் தோரணங்களாலும், தமிழரசு மூவர்ணக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு திருவிழாக் கோலம் அடைந்து காணப்பட்டது.

கூட்டம் நடைபெற்ற அன்று காலை வவுனியா பட்டின சபையின் புதிய அலுவலகத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். கூட்டத்தையொட்டி, பட்டின சபை அலுவலகத்திலிருந்து ஓர் பிரமாண்டமான ஊர்வலம் புறப்பட்டு கூட்ட மைதானத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் கிளிநொச்சி பட்டின சபையின் புதிய தலைவர் உப தலைவர் ஆகியோருடன், பூநகரி, துணுக்காய், பல்லவராயன் கட்டு கிராமசபைத் தலைவர்களும் அழைத்துவரப்பட்டனர். வழி நெடுக தமிழரசு மூவர்ணக் கொடிகளைப் பறக்கவிட்டும், பூரண கும்பம்வைத்தும் மாலையிட்டும், மக்கள் வரவேற்றனர்.

### அமிர் பேச்சு

கூட்டத்துக்கு சமாதான நீதவான் ஆ. சி. முருகேசு தலைமை வகித்தார். கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:—

'இங்கு சில நாட்களுக்கு முன் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய வவுனியா பா. உ. ஒரு பச்சைப் பொய்யை துணிந்து கூறியதாக அறிந்தேன். தமிழரசு எம். பீக்கள் சிலர் மீது லஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினுராம்.

'நான் இது பற்றி சபாநாயகர் திரு. சேர்லி கொரியாவைத் தனிப்பட்ட முறையிலேயே கண்டு இப் பிரசாரத்தில் உண்மையிருக்கிறதாவென்பதை அறிய முயன்றேன். இன்றுவரை தமிழரசுக் கட்சி எம். பீக்கள் எவருக்கும் எதிராக லஞ்சக் கமிஷன் எவ்வித குற்றங்களும் கொண்டு வரவில்லையென்று கூறினுர்: ஆகவே நான் பொய்ப் பிரசாரம் செய்வோருக்கு பகிரங்கமாக இக்கூட்ட மூலம் சவால் விடுக்கிறேன்—உங்களுக்கு துணிவிருந்தால், யார் யார் மீது அப்படிக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதென்பதை வெளியிடுங்கள்! மக்கள் முன்வந்து நின்று பொய் கூற வேண்டாம்.''

### நவம் பேச்சு

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசியதாவது:—

தமிழரசுக் கட்சி எதையும் சலப்பின்றி செய்வதையே விரும்புகிறது. வீண் சலசலப்புக் காட்டுவதால் பலகாரம் கிடையாமற் போய் விடும்.

தமிழுக்கு இந்நாட்டில் எவ்வித உரிமையுமின்றி சிங்களம் மட்டும் ஆட்சி மொழியென்ற நிலையிருந்து வந்தது. நமது தியாகத்தினுல்—இன்று வடக்கு கிழக்கிலாவது தமிழ் ஆட்சி மொழியாக வழி வகுத்துள்ளோம். இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளக் கூடிய உரிமையைப் பெற்ருேம்.

தமிழ் காங்கிரஸ் கட்சியினர் மேடையில் வந்து நின்று சம அந்தஸ்து என்று பேசுவதுடனும், தமிழரசாருக்கு எதிராக வசைமாரி பொழிவதுடனும் நின்று விடுகிருர்கள். அவர்களின் சேவை அதனுடன் சரி. அவர்களுக்கு உருப்படியான கொள்கைகிடையாது. இவர்களுடன் எப்படிகூட்டுசேருவது? ஐக்கிய முன்னணியென்று திரு. பொன்னம்பலம் கூறுவது ஏமாற்று வித்தையே.

'கிளிநொச்சித் தொகுதியில் தென் மராட்சி மக்கள் ஒதுக்கப்படுகிருர்கள் என்று தமிழ் காங்கிரசார் கூறினுர்களாம். அவர்கள் கூற்று பொய் என்பதற்கு கிளிநொச்சி பட்டின சபைத் தலைவராக ஓர் தென் மராட்சிக்காரர் வந்திருப்பதே உதாரணமாகும்.

தமிழ் மக்களை பிரதேச, மாவட்ட, ஊர் வாரியாக பிரிவுபடுத்துவதும், பிளப்பதும் தமிழ்காங்கிரசினரின் ஏக போக வேலையாகும்''.

### உடுவில் எம். பி. பேச்சு

உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பேசியபோது 'தமிழினத்தின் உரிமைகளையெல்லாம் இழப்பதற்கு முழுமுதற் காரணமாக இருந்து வருவது இன்றைய ஒற்றையாட்சி அமைப்புத்தான். எனவே அதை மாற்றி சமஷ்டியமைப்பு பெற நாம் போராடி வருகிருேம். திரு. பொன்னம்பலமோ உழுத்துப் போன ஒற்றையாட்சியையே இன்னும் கட்டிப் புரளுகிருர். இவரா தமிழினத்துக்கு சேவை செய்பவர்?' என்று கேட்டார்.

மூதவை உறுப்பினர் திரு. நடராசா பேசும்போது கூறியதாவது:—

'திரு. பொன்னம்பலத்துக்கும் அவரது குட்டிக் கட்சிக்கும் எவ்வித கொள்கையும் இலட்சியமும் கிடையாது. தமிழரசுக் கட்சியிடம் தெளிவான திட்டவட்டமான கொள்கையுண்டு. ஆகவே கொள்கையற்ற தமிழ் காங்கிரசுடன் தமிழரசுக்கட்சி எப்படி ஒத்துழைக்க முடியும்? 12 பேருக்குப் பின்னுல் மூன்று பேர் செல்வதா? 3 பேருக்கு பின்னுல் 12 பேர் செல்வதா? எது ஒத்துழைப்பு? தமிழ் மக்களின் ஒற்றுமையை திரு. பொ. உண்மையில் விரும்பினுல் தமிழரசுக்கட்சிக்குப் பின்னுல் அணி வகுத்து வரட்டும்'

### இரத்தினம் பேச்சு

திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. கூறியதாவது:—

'இங்கு நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய உடுப்பிட்டி பா. உ. கூறினுராம் — பிரதமரது அலுவலகத்திலிருந்து வரும் சிங்களக் கடிதங்களை நான் ஏற்றுக்கொள்வதாக பிரதமரே பாராளுமன்றத்தில் கூறியதாக — திரு. சிவசிதம்பரம் எதற்காக இப்படியொரு பொய்யைக் கூறினுரோ?

பிரதமரது அலுவலகத்திலிருந்து சிங்களக் கடிதங்கள் எனக்கு அனுப்பப்பட்டதாக கூறப்பட்டதை எதிர்த்து நான் பாராளுமன்றத்தில் திரு. சிவசிதம்பரம் குழுத் தலைவராக இருந்தபோதே பதிலளித்திருக்கிறேன்.

பிரதமரது அலுவலகத்திலிருந்து தமிழில் அதுவும் தமிழ் கையெழுத்துடன் கூடிய கடிதம் எனக்கு அனுப்பப்பட்டதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். எனது அச்சொற்பொழிவு நடைமுறைத் தமிழியக்கத்தினரால் நூலாக

(9-ம் பக்கம் பார்க்க)


ஹெல்த் ஜோய் போட்டியில்

BCC

1000 பரிசுகளுக்குமேல் வெற்றி பெறலாம்

| 1-ம் பரிசு: | 2-ம் பரிசு: | 3-ம் பரிசு: | 4-ம் பரிசு: |
|---|---|---|---|
| ஒரு சிங்கர் குளிரூட்டியுடன் 1000 ரூபா. | ஒரு சிங்கர் தையற்பொறியுடன் 500 ரூபா. | ஒரு குருண்டிக் ரேடியோவுடன் 200 ரூபா. | ஒரு றலி மிதிவண்டியுடன் 100 ரூபா. |

1000 தேற்றப் பரிசுகள்: அத்துடன் வாரந்தோறும்

பி. சி. சி. உற்பத்திப் பொருள் உவந்தளிப்புப் பெட்டி ஒவ்வொன்று. பிரவேசப் பத்திரங்களுள் ஒரு வினுவுக்குரிய விடையாவது சரியாகவுள்ள மிகுந்த துப்புரவுள்ள பத்திரத்துக்கு ஒரு வாகினி ரேடியோவும் 25 ரூபாவும் பரிசாக வழங்கப்படும்- ஒவ்வொரு கிழமையும்.

உங்களுக்குத் தேவையான முழு விதிகளும் அடங்கிய மேலதிக பிரவேசப் பத்திரங்களை உங்கள் ஹெல்த் ஜோய் விற்பனையாளரிடம் அல்லது கையிருப்பாளரிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

முடிவு தேதி: 1968 ஆகஸ்ட் 31.

6. பிரவேசப் பத்திரங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

பி. சி. சி. ஹெல்த் ஜோய் போட்டி,
அஞ்சற் பெட்டி இல: 631, கொழும்பு.

கத்தரிக்க அல்லது படிசெய்க | ஹெல்த் ஜோய் போட்டி கூப்பன் | இப்பிரவேசப் பத்திரத்துடன் ஹெல்த் ஜோய் சுற்றுறை ஒன்று சேர்ந்து அனுப்பிவையுங்கள்.

| படம் | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| தலையாசகம் | 3 | | | | |

பெயர்: ..........
முகவரி: ..........
விற்பனையாளர் அல்லது வியாபாரி பெயர்: ..........
..........
முகவரி: ..........





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபைக்காக தமிழரசு கட்சி எந்த உரிமையையும் விட்டுக்கொடுக்கவில்லை!"

## தங்குமடம்

"சுமைதாங்கி"

"வாங்க சாமி வாங்க எப்படிச்சுகம்?"

'ஏதோ இருக்கிறேனுங்க...ம்...'

'என்னங்க மனதிலே ஏதோ இருக்கிறுப் போல இருக்கு!'

'அப்படி ஒண்ணுமில்லீங்க, இராத்திரி ஒரு கனவு கண்டன் அதைச் சொல்லலாமா...விடலாமா...என்று தான் யோசிக்கிறன்...'

'கனவுதானே... சொல்லுங்க...ம்...சும்மா சொல்லுங்க'

'அப்புறம் கேலி பண்ண மாட்டீங்களே!'

'அவ்வளவு மோசமான கனவா கண்டீங்க?'

'கனவு என்றுல் சும்மா சாதாரணமான கனவல்ல.'

'என்ன அப்படி அசந்திட்டீங்க, கனவில் கண்டதற்கெல்லாம் மனதைப் பறிகொடுத்தால் அப்புறம் இந்த உலகில் நாம் கனவில் மாத்திரந்தான் வாழ முடியும்...'

'தாங்கள் சொல்வதும் சரி, வாழ்க்கையில் அனுபவிக்க முடியாதவற்றைக்கனவிலாவது அனுபவிக்க வேண்டியதுதானே!'

'அது சரியுங்க, நீங்க என்ன கனவு கண்டீங்க?'

'மகாத்மா காந்தியைக் கனவில் கண்டேன்...'

'பூ இவ்வளவுதாஞ? நானும் ஏதோ என்னவோண்ணு ..'

'அது மாத்திரமா அவரோடு பேசினேனுங்க...'

'நீங்க கொஞ்சம் உயர்ந்த மனுசராச்சே அதனுல் தான் உங்க கனவிலே அவர் தோன்றியிருக்கணும்...'

'ஓகோ, என் உயரத்தைப் பற்றிக் குறிப்பிடுறீங்களா? அந்த வெட்கக்கேட்டைஏன் கிளறுறீங்க, சாதாரண குட்டை மனிதர்கள் முன் கூட நான் தலைகுனிந்தல்லே பேசவேண்டியிருக்கு...'

'ம்...அதற்கென்ன செய்வது...அது கிடக்கட்டும் உங்க கனவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ வன் கேட்பம்...'

'நம்ம தமிழ் தலைவர்கள் உலகிலேயே சிறந்த அரசியல் தலைவர்கள் என்று காந்தியே பாராட்டினுர்'

'மகாத்மா காந்தியே பாராட்டினுர்?'

'ஆம, ரொம்பப் பாராட்டினுர். எப்ப எப்ப எப்படி ஏப்படி நடக்கணுமோ அப்ப அப்ப அப்படி அப்படி நடந்து சரியான வழியிலே மக்களை நடத்திச் செல்வதாகவும், எவ்வளவு பொறுமை, அரசியல் தந்திரம், திறமை இருக்க வேண்டுமோ அத்தனையும் நம் தலைவர்களிடம் இருப்பதாகவும் பாராட்டினுர்.

'அதுதான் எல்லோருக்கும் தெரிந்த விடயமாயிற்றே, வேறு ஏதாவது புதிதாகச் சொன்னுரா?'

'சொன்னுர். அன்று தான் ஆங்கிலேயனுக்கு உதவியதையும அதன் பின்பும் ஆங்கிலேயன் நன்றி கெட்டதனமாக நடந்து கொண்டதையும் பல எட்டப்பர்கள் சமயம் பார்த்துத் தம்மை தூற்றியதையும் மறுபக்கம் வீறுகொண்ட தம் ஆதரவாளர்களின் எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியிருந்ததையும் இருபக்கத்தாரையும் மக்கள் புறக்கணித்து எவ்விதம் தமக்குப் பக்கபலம் அளித்துத்தொடர்ந்து போராட்டத்தை நடத்த உதவினுர்கள் என்பதையும் ஒற்றுமையைக் குலைய விடாமல் காப்பாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துச்...'

'சொன்னுரா? கனவிலும் உங்களுக்கு தமிழர் விடுதலை பற்றிய சிந்தனைதான்...'

'ரொம்பச்சரியுங்க, கனவு கண்டாலும் சிலரைப் போல்... கனவிலும் காகத்திற்கு மலம் உண்ணும் எண்ணம் போல் கனவிலும் தம் வயிற்றெரிச்சலைக் கொட்டித்தீர்க்க இறந்து போனவர்களின் துணையை நாடுகிறுங்க, பாவங்க நான் அப்படியொன்றும் காணவில்லையென்பதில் எனக்குத் திருப்தி'

எனக்கும் திருப்தியுங்க உங்க கனவு பலிக்கட்டும் போயிட்டுவாங்க'

'என்னங்க தடுமாறுறீங்க பார்த்துப் போங்க சுமைதாங்கியில் மோதிக்கிட்டு உடம்பை அலட்டிக்காதீங்க'

" ? "

## பொய்ப் பிரசாரம் செய்வோருக்கு செனட்டர் சு. நடராசா சாட்டை!

"மாவட்டசபை மசோதாவுக்காக தமிழினத்தின் உரிமைகள் பலவற்றை நாம் விட்டுக் கொடுத்து விட்டோமென்று சிலர் பொய்ப் பிரசாரம் நடத்தி வருகிறுர்கள். மாவட்டசபை மசோதாவுக்காக நமது மனச்சாட்சிக்கு மாறுக தமிழ் இனத்துக்கு பாதகம் விளைவிக்கக் கூடிய எந்தவொரு சட்டத்தையும் தமிழரசுக்கட்சி ஆதரித்தது கிடையாது. கண்களை விற்று சித்திரம் வாங்கும் கபோதிகளல்ல நாம்"

இவ்வாறு தெல்லிப்பழைத் தமிழரசுக்கட்சிக்கிளைக்கூட்டமொன்றில் பேசிய மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா குறிப்பிட்டார்.

திரு. நடராசா மேலும் தமது பேச்சில் கூறியதாவது:—

'மாவட்டசபைக்காக தமிழினத்துக்கு பாதக மேற்படக்கூடிய சட்டங்களை நாம் ஆதரித்து தமிழினத்துக்கு துரோக மிழைத்து விட்டதாக பொய்யிலே பிறந்து பொய்யிலே அரசியல் நடத்தும் சிலர் நடத்தி வருவதும் ஆதாரமற்ற முழுப் பொய்ப் பிரசாரமாகும்.

தமிழரசுக் கட்சி மனச்சாட்சியை விற்று விட்டு— மாவட்டசபைக்காக எந்த துரோக சட்டத்தையும் ஆதரித்தது கிடையாது. மாவட்டசபை அமைப்பது எமது பல கொள்கைகளில் ஒன்றே தவிர அது மட்டுமே நமது கொள்கையல்ல.

மாவட்டசபைக்காகத்தான் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்தோம், அடையாள அட்டை சட்டத்தை ஆதரித்தோம், திருமலைத்துறை முகத்தேசிய மயத்துக்கு விட்டுக் கொடுத்தோம் என்றெல்லாம் சிலர் கூறிவருகிறுர்கள்.

### இலங்கை இந்திய சட்டம்

இலங்கை இந்திய சட்டத்தை ஆதரித்தோம் என்றுல் அது மாவட்ட சபைக்காகவல்ல. இலங்கை இந்திய



ஒப்பந்த அமுல் சட்டத்தில் கட்டாய நாடு கடத்தலுக்கு இடமில்லையென்பதுதெளிவவானபிறகு-அச்சட்டத்தால் எந்த ஒரு மலை நாட்டுத் தமிழனையும் அவனது விருப்பமின்றி நாடு கடத்தி விட முடியாது என்பதை ஆராய்ந்து தெரிந்த பிறகு தான் ஆதரிக்க முடிவு செய்தோம்.

அதே சட்டத்தை திரு. பொன்னம்பலமும் ஆதரித்தார்; திரு. தொண்டமாவும் ஆதரித்தார். ஆகவே இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தை ஆதரித்ததன் மூலம் தமிழினத்தின் எந்த உரிமையையும் நாம் விட்டு விடவில்லை.

### அடையாள அட்டை

அடையாளஅட்டைமசோதாவிலும் இதே நிலைதான். தமிழ் மக்களுக்கு மட்டுமே அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்தையும் ஏனைய தமிழ் மக்களுக்கு தீமை பயக்கும் அம்சங்களையுமே எதிர்த்தோம். நமது எதிர்ப்பின் பயனுக, அடையாள அட்டை மசோதாவில் நச்சுப்போல இருந்த சரத்துக்கள் அத்தனையும் நீக்கப்பட்டன. அடையாள அட்டைகள் தமிழர் சிங்களவர் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் வழங்கப்படுமென மசோதா கூறுகிறது.

ஆகவே, கள்ளக்குடியேற்றத்துக்கு தமிழரசுக்கட்சியும் எதிர்ப்பானது என்பதை எடுத்துக் காட்ட— தமிழ் மக்களுக்கு பாதகமாக இருந்த சரத்துக்கள் அகற்றப்பட்ட நிலையில் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்தோம். இதனுல் நாம் எந்த உரிமையையும் இழக்கவில்லை.

### திருமலை

திருமலைத்துறை முகத்தை தேசிய மயமாக்கியதை நாம் வன்மையாக எதிர்த்தோம். அத்திட்டத்துக்கு நாம் உடன்படவில்லை. அச்செயலை அன்றும் எதிர்த்தோம், இன்றும் எதிர்க்கிறேம்.

ஆனுல் தேசிய மயத்தின் நச்சுத்தன்மையைஉணர்ந்து ... திரு மலைத் துறைமுகத் தமிழ் தொழிலாளர்கள் —தேசிய மயத்தை ஆதரித்து நின்றனர். எனவே தொழிலாளர் விருப்பப்படி தேசிய மயமாக்கப்பட்டது திருமலைத் துறைமுகம்.

எனவே இவற்றிலிருந்து மாவட்டசபைக்காக நாம் எந்த உரிமையையும் விட்டுக்கொடுக்கவில்லையென்பதும், சிலர் நடத்தும் விஷமப் பிரசாரம் அர்த்த மற்றதென்பதும் தெளிவாகிறதல்லவா?

## வாசகர்களுக்கு

★ சில தடங்கல்களால் ஏற்கனவே அறிவித்திருந்தபடி இவ்வாரம் கமத் தொழில் சிறப்பு மலர் வெளியிட முடியவில்லை.

★ முத்தையன் கட்டு குடியேற்றத் திட்ட விபரங்களும் இவ்வாரம் இடமின்மையால் இடம் பெறவில்லை.

ஆசிரியர்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கருத்தை ஆதரித்து 'தினபதியின்' சகோதர ஏடான 'சன்' அதன் 6-ந் திகதிய இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது.

அதே 'சன்' பத்திரிகையில் இக் கருத்தை ஆதரித்து டாகடர்சி.இ.கொடகும்பர எழுதியுள்ள நீண்ட கட்டுரையொன்லும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. கட்டுரையின் இறுதியில் திரு. கொட கும்பர பின் வருமாறு எழுதியுள்ளார்:—

'இலங்கையின் வரைபடத்திலிருந்து இன்றைய மாகாண எல்லைகள் முற்றுக நீக்கப்பட வேண்டும். அதன் பின்னர், சமஷ்டி பற்றியோ, குடியேற்றத் திட்டங்களில் காணி வழங்குவது பற்றியோ, சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதில் சிக்கல்களோ ஏற்பட இடமிருக்காது. மாகாணப் பிரிவினைகள் இலங்கையின் ஐக்கியத்துக்கு இன்று ஒரு தடையாக இருக்கிறது; விரைவில் இவை கண்டிப்பாக மறைய வேண்டும்.'

## பிலிப்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களுக்கும் கிடைத்த ஓர் வெற்றியாகும்.

### உணர்ந்துள்ளனர்

தமிழ் பேசும் மக்களிடம் சிங்களத்தைத் திணித்துவிட முடியாதென்பதையும், தமிழ் பேசும் மக்களைத் தேசிய சிறுபான்மையினராக ஏற்றுக் கொண்டு வடக்கு கிழக்கில் தமிழை நிர்வாக மொழியாக்குவதும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழிலே தொடர்பு கொள்ள அனுமதிப்பதுமே தேசிய ஐக்கியத்துக்கான ஒரே வழியென்பதைத் தேசிய அரசாங்கத்திலுள்ள சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் உணர்ந்துகொண்டுள்ளனர்.

ஆனுல் அதே நேரத்தில், சுதந்திரக் கட்சியும், ஆர். ஜி. ஹேமாபசநாயக்கா போன்றோரும் இன்னும் தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணித்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறுர்கள். திரு. பிலிப் குணவர்த்தனவும், ஐ. தே. கட்சித் தலைவர்களும் படித்த பாடத்தைச் சுதந்திரக் கட்சியினரும் விரைவில் படித்துக் கொள்ள வழி வகுப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

—

## உபசபா...

(1-ம் பக்க தொடர்ச்சி

மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளட்டும்.

என்ன செய்வது? உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாக முடியுமா?

திரு. அமிர்தலிங்கம் ஓர் 'நாய்தான்.' தமிழினத்தை காப்பாற்ற அல்லும் பகலும் அயராது உழைக்கும் நன்றியுள்ள 'நாய்' தான் திரு. அமிர்தலிங்கம், மந்திரிப் பதவியென்ற எலும்புத் துண்டைக் கண்டதும், அதைப் பெறுவதற்காக 10இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்த நன்றி கெட்ட 'சொறி' நாயல்ல.

## தமிழ் தட்டெழுத்தாளருக்கும் சிங்களத் தடை நீங்கியது!

1956 செப்டம்பர் 24 க்குப் பின் அரசாங்க சேவையில் சேர்ந்த "புதிய ஊழியர்களான" தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கும் சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்க முன் வந்துள்ளது தேசிய அரசாங்கம்.

தமிழ் தட்டெழுத்தாளர்களுக்குச் சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்கும் திறைசேரி சுற்று நிருபம் ஒன்று ஜுலை 29-ம் திகதியன்று எல்லாத் திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

புதிய தமிழ்த் தட்டெழுத்தாளருக்கும் சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டும் என்று நிதியமைச்சரைத் தமிழரசுத் தந்தை அண்மையில் கோரியிருந்தது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஊழியர் பிரச்சினை

# அன்றிருந்த நிலையும் இன்றுள்ள நிலையும்!

**சுதந்திரன் சிறப்பு நிருபர்**

1964 ம் ஆண்டு பெப்ரவரி 26 ம் திகதி சிறிமா ஆட்சி வெளியிட்ட 638 ம் இலக்க சுற்றறிக்கை, சிங்களம் படிக்காமலிருந்த—சிங்களம் படிக்க வேண்டிய எவ்வித நிபந்தனையுமின்றி அரசாங்க சேவையில் 1956 செப்டம்பர் 24 க்கு முன்பு சேர்ந்திருந்தவர்களான ஆயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களை மூன்று மாதத்துக்கிடையில் கட்டாய ஓய்வில் அனுப்பப்போவதாக அறிவித்ததையும், இதனுல் பழைய அரசாங்க ஊழியர்கள் திகைத்து நின்றதையும், பின்னர் 1964 டிசம்பரில் தமிழரசுக்கட்சி ஐ. தே. க.வுடன் சேர்ந்து கூட்டரசாங்கத்தை தோற்கடித்ததையும் அதன் பின்னர் தேசிய அரசாங்கத்துடன் தமிழரசார் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனுக திறைச்சேரிச்சுற்றறிக்கை 700 வெளியிடப்பட்டதையும், திறைச்சேரிசுற்றறிக்கை 700 இன்படி பழைய ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அகற்றப்பட்டு, அவர்களுக்கு நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் கிடைக்க வழி வகுத்ததையும், சென்றவாரம் எடுத்துக் காட்டியிருந்தேன்.

## அரசாங்க ஊழியர் பிரச்சினையில் தமிழரசார் கண்ட வெற்றிகள்!

எனவே வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கவேண்டிய சூழ்நிலையில் 1964ம் ஆண்டு நின்ற பழைய தமிழ் அரசாங்க ஊழியர்கள் இன்று சம்பள உயர்வுகள் பதவி உயர்வுகள் பெற்று மகிழ்ச்சியுடன் வாழுகிறுர்கள் என்றுல் அதற்கு யார் காரணம்? தமிழரசுக் கட்சியல்லவா? அந்த நன்றியை மறந்து தமிழரசுக் கட்சியை இன்று திட்டலாமா? தமிழரசுக்கட்சி சிலர் கூறுவதுபோல அரசாங்க ஊழியர்களைக் கைவிட்டிருந்தால், அவர்கள் இன்று நிம்மதியாக வாழ முடியுமா?

### 55 வயது

55 வயதுக்கு மேல் சேவையில் நீடிப்பதற்குச் சிங்கள அறிவு கோரும் விதியையும் நீக்குவதற்குத் தமிழரசுக் கட்சி முயற்சி எடுத்தும் இது வரை அதில் வெற்றிபெறவில்லை என்பது உண்மை தான். ஆனல் அரசாங்க ஊழியர்களை எங்கே காட்டிக் கொடுத்தது?

700-வது இலக்க சுற்றறிக்கை, 55 வயதுக்குப் பின் சேவை நீடிப்பது பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

''ஓர் உத்தியோகத்தரின் சேவையை 55 வயதுக்கு மேல் நீடிக்கும் போது, அன்னரின் அரசகரும மொழி அறிவு கவனிக்கப்படும். எனினும் அத்தகைய உத்தியோகத்தரின் சேவை பொது நலன் கருதித் தேவையானதென அரசாங்கம் கருதுமாயின், அவ்வுத்தியோகத்தரைச் சேவையில் 55 வயதுக்கு மேலும் வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டு.'

இதன்படி 55 வயதுக்கு மேலும் சேவை நீடிப்புப் பெறக் கூடிய வகையில் நீக்குப் போக்குள்ளதாக இவ்விதி அமைந்திருக்கிறது. இவ்விதியின்படி பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல திணைக்களங்களில் 55 வயதுக்கு மேலும் சிங்கள மொழி அறிவு இன்றி சேவை நீடிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

எனவே பழைய அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் தமிழரசுக்கட்சி இம்மியும் விட்டுக் கொடுக்கவில்லையென்பதையும், தமிழரசுக்கட்சி அரசாங்க ஊழியர்களைக் கைவிட்டுவிட்டதாகவும் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் கூறுவது வீண் விஷமப்பிரசாரம் என்பதையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்களாக.

### புதிய ஊழியர் பிரச்சினை

இனி, 'புதிய ஊழியர்கள்' பிரச்சினைக்கு வருவோம், 'புதிய ஊழியர்கள்' என்று கூறப்படுவோர் அரசாங்க சேவையில் 1956 செப்டம்பர் 24 க்கு பின்னர் சேர்ந்த ஊழியர்களாவர்.

இப்புதிய ஊழியர்கள் அரசாங்க சேவையில் சேரும் பொழுது சேவை நிபந்தனையில் ஒன்றுக சேவையில் சேர்ந்து மூன்று ஆண்டுகளுக்கிடையில் ஒரு குறிப்பிட்டளவு சிங்கள மொழித் தேர்ச்சி அடைவோம் என்பதை ஒப்புக் கொண்டுதான் சேவையில்சேர்ந்தவர்கள் என்பதை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

புதிய ஊழியர்கள் பிரச்சினையில், தமிழரசுக் கட்சி தளர்ச்சியடைந்து விட்டது; புதிய ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு விட்டது; புதிய ஊழியர்களுக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விடுதலை வாங்கித் தரவில்லையென்று சிலர் தமிழரசுக்கட்சியை சாடி வருகிறுர்கள்;

தமிழரசுக்கட்சி, 1956ம் ஆண்டு தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்காதீர் எனக் கேட்டுக் கொண்ட போது, மொழி உணர்ச்சி கொண்ட பல புதிய ஊழியர்களும் சிங்களம் படிக்க மறுக்கும் இயக்கத்தில் ஆர்வத்தோடு குதித்தனர்.

புதிய ஊழியர் பிரச்சினையை ஆராயும் போது 1956 முதல் 1965 வரை நாட்டில் தமிழ் மக்களும், தமிழ்மொழியும் இருந்து வந்த நிலையையும், பழைய ஊழியர்களுக்கு ஏற்படவிருந்த ஆபத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

### அன்றைய நிலை

*(1) 1956 முதல் 1965 வரை நாட்டை ஆட்சி புரிந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கங்களும் கூட்டரசாங்கமும் தமிழ் மக்களின் தொண்டைக்குள் வலுக்கட்டாயமாக சிங்களத்தைதிணிக்க வேண்டுமென பிடிவாதமாக நின்றன. தமிழ் மொழிக்கு வடக்கு கிழக்கில் கூட ஆட்சியுரிமை அளிக்க மறுத்து வந்தன. தமிழ் மக்களை இந்நாட்டின் தேசிய சிறுபான்மையினர் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தன.*

*(2) சிறிலங்கா, கூட்டு அரசாங்கங்களின் கீழ் தமிழ் மக்கள் நாயினும் கீழாய் மதிக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கில் இராணுவ பொலீஸ் தர்பார் நடத்தப்பட்டது. 1956, 1958ம், ஆண்டுகளில் தமிழ் மக்களை சிங்கள இன வெறியர்கள் தாக்கினர்கள். இத்தாக்குதல்களினுல் தமிழர் பலர் உயிரிழந்தனர். சொத்திழந்தனர்; தமிழ் மாதர் பலர் கற்பிழந்தனர்; இதை அப்போதைய அரசாங்கமும் கண்டும் காணுமல் இருந்தது.*

*(3) தமிழ் அரசாங்க ஊழியர்களில் அதிக எண்ணிக்கையுடைய பழைய ஊழியர்களிடம் சிங்களத்தைதிணிக்கவும், சிங்களம் படிக்காதவர்களை கட்டாயமாக வீட்டுக்கு அனுப்பவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.*

### வாக்குறுதி அளிக்கவில்லை!

இத்தகைய சூழ்நிலையில், தமிழ் மக்கள் மேல் மிருகத்தனமான, மிலேச்சத்தனமான அடக்கு முறை ஆட்சி நடத்தப்பட்ட வேளையில் —தமிழ் மொழிக்கு எவ்வித உரிமையும் அளிக்கப்படாத கட்டத்தில், புதியஅரசாங்க ஊழியர்கள் கூட சிங்களம் படிப்பது தமிழினத்தின் உரிமைப் போராட்டத்துக்கு ஒரு பலவீனம் என்று அப்போது உணரப்பட்டது. எனவே அன்றைய அரசியற் சூழ்நிலையில் சிங்களம் படிக்க மறுத்து நின்ற புதிய ஊழியர்களின் உணர்ச்சியையும் தமிழரசுக்கட்சி வரவேற்றது.

ஆனல் புதிய ஊழியர்களின் சிங்கள நிபந்தனையை நீக்கித்தருவோம் என்றே, புதிய ஊழியர்கள் சிங்கள மொழியை துப்புரவாகப் படிக்காமலே அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கித்தருவோம் என்றே தமிழரசுக் கட்சி எந்தக்கட்டத்திலும் எவ்வித உறுதிமொழியும் அளித்திடவில்லை.

எனினும் 1965ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஏற்பட்ட போது பழைய அரசாங்க ஊழியர் பிரச்சினைக்கு ஓரளவு திருப்திகரமான தீர்வு காணப்பட்டது. தமிழ் மக்களின் கௌரவம் ஓரளவு உயர்ந்தது. வடக்கு கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியென்பது ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்நிலையிற்றுன், அரசாங்கசேவையில் சேர்ந்த புதிய தமிழ் ஊழியர் பிரச்சினையும் ஆராயப்பட்டது. புதிய ஊழியர்கள் சிங்களம் படிப்போம் என்பதை ஒப்புக் கொண்டு அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களாதலால், சிங்கள நிபந்தனையிலிருந்து அவர்கள் அனைவருக்கும் முற்றுக விடுதலை பெற்றுக்கொடுக்க தமிழரசுக்கட்சியால் முடியவில்லை.

### மீண்டும் 3வருட கால எல்லை

*ஆனல், 1956 செப்டம்பர் 24க்கு பின் 1965வரை அரசாங்க சேவையில் சேர்ந்த புதிய ஊழியர்களுக்கு சிங்களம் படிப்பதற்கென மேலும் 3வருட கால அவகாசத்தை தேசிய அரசாங்கம் வழங்கியது. இதனுல், அரச சேவையில்சேர்ந்து மூன்று ஆண்டுகளுக்கிடையில் சிங்களத்தில் தேர்ச்சி பெற ஒப்புக் கொண்டிருந்த ஓர் புதிய ஊழியன் — தமிழினத்தின் நலன் கருதி அதுவரைசிங்களம் படியாதிருந்திருப்பினும்—சேவையில் சேர்ந்த காலத்தில் சிங்களத்தை பயில அளிக்கப்பட்ட மூன்று வருடக் காலக்கெடுவில் ஒருநாள் கூட இழப்பதற்கு தமிழரசுக் கட்சி இடமளிக்கவில்லையென்பது தெளிவு.*

*அதே சமயம் தமிழரசுக் கட்சியின் தலையீட்டால் புதிய ஊழியர்களுக்கு சுதந்திரக்கட்சி அரசாங்கம் விதித்திருந்த சிங்களப்பரீட்சைகள் தேசிய அரசாங்கத்தால் தரம்குறைக்கப்பட்டன. பல துறையினருக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்கும் அளிக்கப்பட்டது.*

### தரம் குறைந்தது

**1962ம் ஆண்டு ஜுலை 20ம் திகதி சுதந்திரக்கட்சி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 581ம் இலக்க சுற்றறிக்கையின்படி, புதிய ஊழியர்கள் (ஏற்கெனவே சிங்களத்தில் க. பொ. த. ப. தரம் சித்தியடைந்த பின்னர்) சேவையில் உறுதியாக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கிடையில் சிங்கள சிரேட்ட தராதரப் பரீட்சையில் (திறமை காண் தடைப் பரீட்சை) சித்தியடைய வேண்டும் என்றும், இச்சோதனையில் சித்தியடைந்த பின்னர் தான் 5வது சம்பள உயர்வு வழங்கப்படுமெனவும் நிபந்தனை விதித்தது.**

*தேசிய அரசாங்கத்தின் 1966ம் ஆண்டு செப்டம்பர் 26ம் திகதிய 701ம் இலக்க சுற்றறிக்கை அந்த நிபந்தனையை முற்றுக இரத்துச் செய்தது. புதிய ஊழியர்கள் சிங்களத்தில் ஆகக்கூடி 3ஆண்டுகளுக்கிடையில் 8ம்வகுப்புதரம் அளவு சித்தியடைந்தால் மட்டுமே போதுமென்பதை இச்சுற்றறிக்கை உறுதி செய்தது.*

**புதிய ஊழியர்கள் பதவியேற்றப் பரீட்சைகளும் திறமைகாண் தடைப்பரீட்சைகளும் அரசகரும மொழியில்(சிங்களத்தில்) மட்டுமே நடத்தப்படும் என சுதந்திரக்கட்சி ஆட்சியின் முந்திய சுற்றறிக்கை கூறியது.**

*தேசிய அரசாங்கத்தின் 701ம் இலக்க சுற்றறிக்கை அதை நிராகரித்து, ஓர் ஊழியர் அரசாங்க சேவையில் சேரும்பொழுது எந்த மொழியில் பரீட்சை எடுத்தாரோ அதே மொழியில் பதவியேற்றப் பரீட்சைகளும், திறமை காண் தடைப் பரீட்சைகளும் எடுக்கலாமென அறிவித்தது.*

*இன்னும் 701ம் இலக்க சுற்றறிக்கையின்படி,*

*தமிழ் மொழி மூலம் சேர்ந்த ஆசிரியர்கள்,*

*வானெலி தமிழ் அறிவிப்பாளர்,*

*தமிழ் சங்கீத ஆசிரியர்கள்,*

*தமிழ் சுருக்கெழுத்தாளர்,*

*விஞ்ஞான, வைத்திய, இயந்திரவியல், அல்லது பிற தொழில் நுட்ப ஆய்வுகூடங்களில் ஆய்வுத்தியோகத்தர்கள்—ஆகியோருக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டது.*

*அது மட்டுமன்று, அளிக்கப்பட்ட மூன்று ஆண்டுத் தவணைக்குள் சிங்களம் படிக்கத்தவறும் புதிய ஊழியர்களைப் பற்றி சுற்றறிக்கை 701 பின்வருமாறு கூறுகிறது.*

**"நீடித்த தகுதி காண் சோதனைக்கால முடிவில் விதிக்கப்பட்ட தேர்ச்சி தரத்தை எய்தத்தவறும் உத்தியோகத்தர்களுக்கு 120, 121ம் நிர்வாகப் பிரமாணங்களின் ஏற்பாடு பொருத்தமுடையதாகும்.**

*நிர்வாகப் பிரமாணங்கள் 120, 121 பின் வருமாறு கூறுகிறது:—*

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ஜீ. ஜீ. க்கு...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பெருவிருப்புடன் எதிர்பார்த்திருந்த நேரத்தில் கூட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து அதை எதிர்ப்பிரசாரம் செய்து 'முறியடித்ததில்' தங்களுக்கும் பங்குண்டல்லவா?

### என்ன துரோகம்

தமிழினத்துக்கு தாங்கள் செய்த துரோகங்களை எழுதிக்கொண்டே போனால் இக்கடிதமும் நீண்டு கொண்டே போகும். ஏனெனில் உங்கள் அரசியல் முழுவதுமே துரோகங்களும் கழுத்தறுப்புகளும், குத்துக்கரணங்களும் நிறைந்தது தானே!

தமிழரசுக் கட்சி கடந்த 19 வருடங்களாக ஏதோ 'துரோகம்' புரிந்துவிட்டதாக அளந்திருக்கிறீர்கள்! அது என்ன துரோகம் என்னவென்பதை ஏன் கூறாமல் விட்டுவிட்டீர்கள்?

இருந்தால் தானே கூறுவதற்கு என்றீர்களா? உண்மைதான்.

தமிழரசார் உங்களுடன் சேர்ந்து 10 இலட்சம் மலையகத் தமிழரை கழுத்தறுக்க மாட்டோம் என்று உங்களை விட்டு வெளியேறியது துரோகமா?

பிளவுபட்டு நின்ற தமிழினத்தை ஒரே தேசிய இனமாக ஒரு அணியின் கீழ் ஒன்று திரட்டியது துரோகமா?

சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சத்தியாக்கிரகங்களும், போராட்டங்களும் கிளர்ச்சிகளும் நடத்தியது துரோகமா? அதனால் சொத்துசுகங்களை இழந்து சிறைச்சாலைகளில் வாடியது துரோகமா? கட்சியின் கண்மணிகளாம் வன்னியரையும் மற்றும் மூவரையும் பறிகொடுத்தது துரோகமா?

1957-ம் ஆண்டு எவ்வித பாதுகாப்புமின்றி கலவரம் நடந்த கல்லோயா பகுதியில் தன்னந்தனியே சென்று அங்குள்ள தமிழ் மக்களுக்கு உதவி புரிந்தது துரோகமா?

வேலையிழக்கும் நிலையிலிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் சம்பளவுயர்வும், பதவி உயர்வும் பெற்றுக் கொடுத்து, சிங்களக் கெடுபிடியை அகற்ற வழி வகுத்தது துரோகமா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை உத்தியோகமொழியாக்கக் கூடிய தமிழ் மொழிப் பிரமாணங்களை பாராளுமன்றத்தில் தேசிய அரசாங்கம் நிறைவேற்ற காலாக இருந்தது துரோகமா?

தமிழ் மக்களின் சுயாட்சிக்கு வழி வகுக்கும் மாவட்டசபைகளை கொண்டு வர முயற்சித்தது துரோகமா?

நாட்டில் இன்று தமிழ் மக்கள் படும் தொல்லைகளுக்கெல்லாம் மூலகாரணமான ஒற்றையாட்சியை எதிர்ப்பதும், சமஷ்டி கோருவதும் துரோகமா?

தமிழரசுக் கட்சியின் எந்த நடவடிக்கை துரோகம்? நீங்கள் தயவு செய்து விளக்கி கூறுவீர்களா?

### சிங்கள வெறியரும் நீங்களும்

தீவிர சிங்கள வெறியர்களுக்கு தமிழரசுக் கட்சியின் செயல்கள் எல்லாம் துரோகமாகத் தெரிவது சகஜம். அதே போல உங்கள் கண்களுக்கும் தமிழரசுக் கட்சியின் செயல்கள் துரோகமாகத் தெரியுமானால், நீங்களும் தீவிர சிங்கள வெறியர்களுக்கு உடந்தையாக இருக்கிறீர்களோ என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கும் ஏற்பட இடமளிக்கிறீர்கள்!

சிங்கள தீவிரவாதிகள்—இந்நாட்டில் தமிழினத்தையொழித்து கட்டுவதையே மூலாதார நோக்கமாக கொண்டுள்ளவர்கள் உங்களைப் போற்றுவதும், தமிழரசுக் கட்சியை தூற்றுவதும் இச் சந்தேகத்தை மேலும் ஊர்ஜிதமாக்காதா?

### சம அந்தஸ்து என்ன ஆச்சு?

சம அந்தஸ்துதான் உங்கள் கொள்கையென்றுவேறு கூறியிருக்கிறீர்கள்! அதைத்தானே தேர்தலுக்குத் தேர்தல் மேடைகளில் வெறுமனே கூறிக்கொண்டு வருகிறீர்கள்?

சம அந்தஸ்து என்று மேடைகளில் கூறுவதைத் தவிர கடந்த 18 ஆண்டுகளாக சமஅந்தஸ்தைப் பெற நீங்கள் என்ன முயற்சி செய் செய்தீர்கள்? ஒன்று கூட இல்லையே! மாறாக தமிழரசார் மொழியுரிமைக்கு போராடிய போதெல்லாம் முட்டுக்கட்டையாகவல்லவா இருந்து வந்துள்ளீர்கள்?

### வட்ட மேசை!

வட்டமேசை, வட்ட மேசையென்று அடிக்கடி கூறுவீர்கள். இப்பொழுது சிலகாலமாக அதை விட்டு விட்டீர்கள் போலும். இனி தேர்தல் நெருங்க மீண்டும் அந்த திவ்விய மந்திரத்தை உச்சரிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

சரி, வேறு கொள்கையென்று சொல்வதற்கு எதுவுமேயில்லையுங்களிடம். வட்டமேசைதான் உண்டு. அந்த வட்ட மேசையைக் கூட்டவாவது ஏதாவது சின்ன முயற்சியாவது செய்தீர்களா?

வட்ட மேசையை நான் கூட்டினால் யார் வரப்போகிறார்கள் என்ற அச்சத்தில் தான் அந்த முயற்சியில் நீங்கள் இறங்கவில்லையா?

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல நீங்கள் ஒரு பொழுது போக்கு அரசியல்வாதி தானே? எனவே தேர்தல் நேரங்களில் மேடைகளில் கூற மட்டும் சம அந்தஸ்து, வட்டமேசை, ஐக்கிய முன்னணியென்று சில மந்திரங்களை வைத்திருக்கிறீர்கள். உங்களைப் போய் அவற்றை ஏன் நடைமுறைப்படுத்தவில்லையென்று கேட்டால், கேட்பவர்கள தான் முட்டாள்களாக வேண்டும்.

### தேர்தல் பல்லவி

கடைசியில் மீண்டும் ஐக்கியம், ஒற்றுமை என்று உங்கள் தேர்தல் கால பல்லவியைப் பாடியிருக்கிறீர்கள். உங்கள் பல்லவிக்கு அனுபல்லவி வாசித்து தலையங்கம் தீட்டியிருக்கின்றன ஓர் ஆங்கிலத் தினசரியும், தமிழ்த் தினசரியும்.

ஐக்கியத்துக்கு யாரும் எதிர்ப்பில்லையே! தமிழ் மக்கள் ஐக்கியப்பட வேண்டுமென்பதுதானே எல்லோரது இலட்சியமும்! ஆனால் ஐக்கியம் வேண்டும் என்ற அதே வாயால் தமிழரசுக் கட்சியையும் வாய்க்கு வந்தபடி திட்டியிருக்கிறீர்கள். இதுதான் ஐக்கியத்துக்கு அறிகுறியா?

தமிழரசுக் கட்சிக்கு திட்டவட்டமான கொள்கையொன்றுண்டு. அக் கொள்கையை பின்பற்றும் இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

### கொள்கையற்றவர்

உங்களிடமோ வட்ட மேசையைத் தவிர வேறு கொள்கையெதுவுமில்லை. எனவே உண்மையில் ஐக்கியத்தில் உங்களுக்கு அக்கரையிருந்தால் பேசாமல் தமிழரசுக் கட்சியுடன் ஒத்துழையுங்கள்.

உண்மையில் உங்களுக்கு ஒற்றுமையில் அக்கறையிருந் திருந்தால், மாவட்ட சபை வெள்ளையறிக்கை விவாதத்தின் போது அதைக் காட்டியிருக்கலாமே. மாவட்ட சபை வெள்ளையறிக்கையை எதிர்த்து தமிழ் மக்களிடையே உள்ள பிளவை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டி—பீலிக்ஸ் போன்றோர் பாராளுமன்றத்தில் கை கொட்டி நகைக்குமளவுக்கு நடந்துவிட்டு கினிநொச்சியில் ஐக்கியம் பேசி கபட நாடகம் ஆடுவது ஏன்?

### இயலுமானால் செய்யுங்கள்

ஆறு கடலுடன் சங்கமிக்க வேண்டும். அதுதான் இயற்கை நியதி. 12 பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் மகோன்னத ஆதரவையும் பெற்று ஆலமரம் போல வளர்ந்து நிற்கும் தமிழரசுக் கட்சியுடன் மூன்றே மூன்றுபேரைக் கொண்ட உங்கள் கட்சியும் ஒத்துழைக்க வேண்டும்.

இயலுமானால் அதைச் செய்யுங்கள். இயலாவிட்டால் இனியும் ஐக்கியம், ஒற்றுமை என்ற போலி வார்த்தைகளால் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என்று நம்பியிராதீர்கள்.'

—

## ஈழத் தமிழர்கள் தமிழ்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொட்டே, வடமொழியின் தாக்குதல் தமிழுக்கு இல்லை விடாதிருந்துவந்ததால், தமிழன் கிளை மொழிகளாய், தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் துளுவும் பிறந்தன. தமிழ் மட்டுமே வடமொழித் தாக்குதலுக்குச் சாயாமல் எதிரூன்றி நின்று வருகின்றது மட்டுமல்ல எதிர் தாக்குதலிட்ட வடமொழி செத்த மொழியாக அல்ல மௌன மொழியாக ஆய்வுக்காரரிடையே நின்று நிலவுகின்றது.

### கலப்பு ஏற்படாத காரணம்

மொழியியல் தன்மையில் தமிழுக்குள்ள இனிமை குன்றுதிருப்பதன் மறைவும், அதன் பால் உள்ள இலக்கண அமைதிகள்தான் உடனிலை வேற்று நிலை மெய் மயக்கங்கள் தமிழிலிருந்து கட்டுப்பாடு செய்து வருவதால், பிறமொழி கலப்பு விரைந்தேற்பட வழிதோன்றவில்லை.

இவ்வமைதிகளும் மயக்கங்களும் இல்லாதிருந்தால் தமிழ் என்றோ அழிந்திருக்கும். வட இந்திய மொழிகள் அனைத்தும வடமொழியின் விரவுதலையும் உருது பாரசீக மொழிகளின் மருவுதலையும் பெற்று நடக்கின்றன.

இவ்வாறான காரணங்களால், தமிழ் ஒரு தனித் தன்மை வாய்ந்தது என்பது மட்டுமல்ல, தமிழனும் ஒரு தனித் தன்மை வாய்ந்தவனே என்று சிறப்போடு கூறி மகிழலாம்.

அத்துடன், தனைப் பெற்ற நாட்டின்—பகுதியின் பெயரைத் தான் புக்க பகுதிக்கும் பதித்து அதன் புகழை[illegible] செய்து வாழ்ந்தவன் என்பதும் பெறப்படும் அன்றோ!

(நன்றி: காஞ்சி)

## புதிய ஊழியர்...

(8-ம் பக்கம் தொடர்ச்சி

**'ஒரு அதிகாரி தனக்கு கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் தனது பதவியை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியாவிடில், அது அந்த அதிகாரியின் செயலுக்கு அப்பாற்பட்ட செயலாகக் கருதப்பட்டு அத்தகுதியை அடைய மேலும் நியாயமான கால எல்லை அளிக்கப்படலாம்.'**

இவற்றிலிருந்து 701ம் இலக்கச் சுற்றறிக்கையின் படி கொடுக்கப்பட்ட காலக்கெடுவில் சிங்களத் தகுதிப்பரீட்சையில் சித்தியடையவில்லையென்பதற்காக புதிய ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய முடிதென்பதும், அவர்களுக்கு நிர்வாகப் பிரமாணங்கள் 120, 121ன்படி கால எல்லை நீடிக்கப்பட வேண்டுமென்பதும் தெளிவாகிறது. இது புதிய ஊழியர்கள் பிரச்சினையில் தமிழரசுக்கட்சி ஈட்டிக் கொடுத்த வெற்றியல்லவா?

எனவே 1965ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போது, தமிழரசுக் கட்சி தனது முழு சக்தியையும் பயன்படுத்தி அரசாங்க ஊழியர் பிரச்சினையில் எவ்வளவு தூரம் வெற்றிபெற முடியுமோ அவ்வளவு தூரம் வெற்றியீட்டிக் கொடுத்திருக்கிறது. இந்த உண்மைகளை மக்கள் முன் மூடி மறைக்க சிலர் முயற்சி செய்வது பலன் தராது. ஏனெனில் உண்மை எக்காலத்தும் அழியாதது.

## தமிழரசு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் காணிக்கச்சேரிகளில் தலையிடுவதாகவும், ஏழைமக்கள் காணி பெற தடையாக இருக்கிறேன் என்றும் கூறினாராம் மற்ற சிவசிதம்பரம். இவையும் முழுப்பொய்களே. உண்மையில் நான் இதுவரை எந்தக் காணிக் கச்சேரிக்கும் சென்றது கிடையாது. ஏழைகளுக்கு கிடைக்கவேண்டிய காணிகளை பணக்காரர்கள் தட்டிக் கொண்டு போவதைத்தான் நான் எதிர்த்து வருகிறேன்.


'திருவாளர்கள் சிவசுந்தரமும், ஆனந்தசங்கரியும் என் மீது வசைமாரி பாடினார்களாம். பாவம் அவர்கள் இருவரும் பதவி பெற்று பின்னர் இழந்தவர்கள். எனவே என்னை தூற்றுவதைக் கண்டு நான் ஆத்திரப்படவில்லை.

'உத்தியோகத்தர்களை நான் இடமாற்றம் செய்து வருவதாக கூறினார்களாம். இடமாற்றவேலைகளை கவனிப்பது நானல்ல. அது திணைக்கள அதிகாரிகளின் வேலை. குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் மீது மக்கள் ஏதாவது முறையிட்டால் மட்டுமே நடவடிக்கையெடுப்பது எம். பீ. என்ற முறையில் எனது கடமையாகும். இப்பகுதியில் இரு கிராம சேவகர்கள் மக்களின் வாக்குகளைப் பதிவு செய்வதில் ஒழுங்கீனமாக நடந்ததால் விசாரணைக்குள்ளாயினர்'

பூனகரி—பரந்தன் பஸ் சேவை, மக்கள் வங்கி போன்றவை தமது சேவையால் தான் கிடைத்தது என்பதையும் திரு. இரத்தினம் நினை நாட்டினார்:

கூட்டத்தில் வழக்கறிஞர் ஆலால சுந்தரமும் மற்றும் பலரும் பேசினர்.

## "கலாநிகேதன்"



சிறந்த கலைப்படைப்புக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் கண்டு களிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு வானொலியிலும் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளித்துள்ள 'செல்வராஜ்' கலாநிகேதன் ஸ்தாபனத்தை நிறுவியுள்ளார். இவருடைய இத்திட்டத்தை இலங்கையிலே கலை ஓங்கி வளர வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்களும், சிறந்த கலைப்படைப்புகளைப் பார்த்து ரசிக்க விரும்புவோரும், ஏகமனதாக வரவேற்கிறார்கள்.

ஒரு வருட அல்லது அரை வருட சந்தாவசூலித்து மாதந்தோறும் ஒரு சிறந்த கலை நிகழ்ச்சியை சரஸ்வதி மண்டபத்தில் அளிக்கத் திட்டமிட்டுள்ளது, 'கலாநிகேதன்'.

'கலாநிகேதனின் முதலாவது நிகழ்ச்சியாகிய 'இசை—பிருந்தா' இந்த மாதம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.]

—

## வடகரையில் கள்ளத்தோணிகள் குவிகின்றனராம்

'மாவட்டசபை மசோதா கொண்டுவரப்பட மாட்டாது என்று பிரதமர் உறுதியாக அறிவிக்கவில்லை. இது துரதிருஷ்டமானது' இவ்வாறு கும்பிறுபிட்டிய திரிநிக்காய சங்க சபாவின் கூட்டமொன்றில் பேசிய யாழ். நாகவிகாரையைச் சேர்ந்த தலைமைப் பிக்குவான நந்தராம என்பவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—

'தமிழரசுக் கட்சியின் அடிப்படை நோக்கம் எப்போதாவது ஒருநாள் இந்நாட்டில் ஒரு தனித் தமிழ் நாடு அமைப்பதே. மாவட்டசபை நிறுவப்படுமானால் தனித்தமிழ் நாட்டுக்கு அது அடிப்படையாக அமைந்து விடும்.

'இலங்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தமிழரைக் குடியேற்றும் ஓர் இயக்கம் நடந்து வருகிறது. வடகரையில் தினசரி ஏராளமான கள்ளக் குடியேற்றவாசிகள் வந்து இறங்கியபடி இருக்கிறார்கள்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 - வது மங்களகரமான நாள்!

"பத்திரிகைகள ஒரே குரலில் பாராட்டுகின்றன! இரசிகப்பெருமக்களின் பாராட்டுதல்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன!! வசூலில் ஓர் மாபெரும் சாதனையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது!!! சென்னையில் 150 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிமுரசு கொட்டி இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற ஒரே சித்திரம்!

**சென்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ஈஸ்வரன்** (கிளிநொச்சி) **ஆனந்தா** (கம்பளை) **ஈஸ்டேர்ன்** (சம்மாந்துறை) **சென்ட்ரல்** (பருத்தித்துறை)

**நியூஜோதி** (இரத்தினபுரி) **ராதா** (கந்தப்பளை)

**ஜெமினிகணேசன், சரோஜாதேவி, நாகேஷ், விஜயநிர்மலா,**
**சிவகுமார், புஸ்பலதா டி. கே. பகவதி எல். வரலட்சுமி நடித்த**

# பணமா? பாசமா?

---

## விரைவில் எதிர்பாருங்கள்!

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா ★ நாகேஸ் —நடித்த—

# தேர்த்திருவிழா

---

## ஜனத்திரள் நிறைந்த 4 - வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்நகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜித (ஹற்றன்)



* முத்துராமன்
* ஜெயலலிதா
* ரவிச்சந்திரன்
* நாகேஷ்



அசோகன்
* மனோரமா
* மனோகர்

—நடித்த—



ஈஸ்ட்மன் கலர் சித்திரம்

# நான்


---

## 8வது வாரம்!

லிடோ (பொரளை) கெப்பிட்டல் (கொழும்பு)

# சங்கம்

---



## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெயிட்டி (கொழும்பு) விலாசினி (தெஹிவலை) ராஜி (திருமலை) வின்சர் (யாழ்நகர்)

ஸ்ரீமுருகன் (வவுனியா) லிபர்ட்டி (பதுளை) இம்பீரியல் (மட்டுநகர்)

முத்துராமன், ராஜஸ்ரீ, பாலையா, டி. ஆர். ராமச்சந்திரன் பிரசன்னு, சுந்தரராஜன் மனோரமா, சுந்தரிபாய், மனோகர் —நடித்த—

# அனுபவம் புதுமை

---

## 8வது ஜனத்திரள் வாரம்!

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) ஈரோஸ் (பாமன்கடை)

* எம். ஜி. ஆர் * சரோஜாதேவி
* ஜெயலலிதா * மனோகர்
* நம்பியார் * சந்திரகாந்தா
* அசோகன் * நாகேஷ் —நடித்த

# அரசகட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கைசிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்ஸ்தா பனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.